சமூகவியலாளர்களுக்கான பயிற்சியும் புத்துணர்வு எழுச்சியும்



# கைநூல்

## பெண்களுக்கு எதிரான வன்முறை

## பெண்களும் சட்டமும்

## பெண்களும் தலைமைத்துவமும்

*Sponsored by:*

**CANADIAN INTERNATIONAL DEVELOPMENT AGENCY**

*Published by:*

AFFECTED WOMEN'S FORUM
R. K. M. ROAD,
AKKARAIPATTU

Tele. No. 067 - 78237

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Gessy Arumuhi

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவியலாளர்களுக்கான பயிற்சியும் புத்துணர்வு எழுச்சியும்



# கைநூல்

## பெண்களுக்கு எதிரான வன்முறை

## பெண்களும் சட்டமும்

## பெண்களும் தலைமைத்துவமும்

*Sponsored by:*

**CANADIAN INTERNATIONAL DEVELOPMENT AGENCY**


*Published by :*


**AFFECTED WOMEN'S FORUM**
**R. K. M. ROAD,**
**AKKARAIPATTU**


**Tele. No. 067 - 78237**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








noolaham.org | aavanaham.org

# சமூகவியலாளர்களுக்கான பயிற்சியும் புத்துணர்வு எழுச்சியும்



**நன்மைகள் விளைய**
**நன்மைகள் செய்வோம்.**
**நமக்கென உளதை**
**பிறர்க்கும் கொடுப்போம்.**

- நல்வாக்கு -

ஆக்கம்:

பாதிப்புற்ற பெண்கள் அரங்கம்
ஆர். கே. எம். வீதி,
அக்கரைப்பற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


0.0. அறிமுகம்

01. பயிற்சி நெறி பற்றிய பொதுத் தகவல்

02. வயது வந்தவர்களுக்கான பயிற்சி முறைகள்

02.1 பயிலுனரை மையமாகக் கொண்ட கல்வி முறைக்கான வழிகள்

02.2 பயிற்சி பெறுபவர்களுக்கான சாதகமான சூழல் - நடை முறை வழிகள்

03. பயிலுனர்களை இனம் காணல்

04. பயிற்சியைத் திட்டமிடல்

05. மீளாய்வு

05.1 பெண்களுக்கெதிரான வன்முறை

05.2 பெண்களும் சட்டமும்

05.3 பெண்களும் தலைமைத்துவமும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அறிமுகம்

அம்பாரை மாவட்டத்திலுள்ள அக்கரைப்பற்று என்னுமிடத்தில் வன்செயல்களால் பாதிக்கப்பட்டு அநாதரவாக, கைவிடப்பட்ட நிலையில் வாழ்ந்த மக்களை ஒன்றிணைந்து அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுத்தப்படுவதை இலக்காகக் கொண்டு பாதிப்புற்ற பெண்கள் அரங்கம் செயற்பட்டு வருகின்றது. ஆறு கிராமங்களைத் தேர்ந்து எடுத்துத் தனது சேவையை முன்னெடுத்துச் செல்கின்றது.

பொதுவாகக் கிராமப்புறப் பெண்கள் வெளியுலகிற்கு வராமல் சமையல், வீட்டுப்பணிகளில் ஈடுபட்டுக் காலத்தைக் கடத்துகின்றனர். சில சந்தர்ப்பங்களில் இவர்களது உரிமைகள் பறித்தெடுக்கப்படும் போது இப்பெண்கள் பிறரில் தங்கிவாழவும். நேரிடுகிறது. அறியாமையினால் ஏமாற்றத்திற்குள்ளாகிப் பல்வேறு தாக்கங்களுக்கும் ஆளாகின்றாள். சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் தனிநபர் அறிவு விருத்தியுடன் அதற்கான ஆக்கத்திறனும், அபிவிருத்தி தொடர்பான உடன்பாட்டுரீதியான மனப்பாங்கும் விருத்தி பெறுதல் வேண்டும். அப்போது தான் நவீனமயமாக மாறிக்கொண்டிருக்கும் சமுதாயத்தின் சவால்களுக்கு முகம் கொடுக்க முன்வரமுடியும். இதற்கான வழிமுறைகள், விடயங்கள் இந்நூலில் அடங்கியுள்ளது. பெண்களும் தலைமைத்துவமும், பெண்களும் வன்முறையும், பெண்களும் சட்டமும் என்னும் விடயங்கள் ஏற்கனவே பயிற்சிப் பாசறையில் விளக்கப்பட்டவை. ஏறத்தாள - 30 இளம் யுவதிகளைத் தேர்ந்தெடுத்துப் பயிற்றுவிக்கப்பட்டது. இதே போன்று இன்னும் 30 குழுத் தலைவிகளுக்கும் பயிற்சியளிக்கப்படும். இதே பயிற்சியாளர்களில் இருந்து திறமை மிக்க 10 பெண்களைத் தேர்ந்தெடுத்து இக் கைநூல் தரும் விடயங்களைப் பயிற்சி மூலம் புகட்டிப் பெண்களை விழிப்புணர்வடையச் செய்ய வேண்டும். இக் கைநூலின் மூலம் அரசு சாரா நிறுவனங்களும் ஏனையோரும் பயனடைய முடியும். இப் பயிற்சி நெறியை நடாத்துவதற்கு மூலாதாரமாக இருந்தது. 'சீடா' **(CIDA)**நிறுவனத்தின் அபிவிருத்தி ஆலோசகர் திருமதி. சர்வமங்களம் கைலாசபதி அவர்கள் சக்தித் திட்டத்தின் கீழ் உதவி பெறமுயலலாம் என்று கூறினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல முறை எங்களுடன் தொடர்பு கொண்டு அதிக அக்கறை எடுத்து எங்களுக்கு ஊக்கமளித்த அவருக்கும் அந்த நிறுவனத்தில் இத்திட்டத்தை வழி நடத்திய குழுவுக்கும் நாம் அன்புடன் நன்றியைக் கூறுகின்றோம்.

'பெண்களும் தலைமைத்துவமும்' பயிற்சி நடாத்திய திரு. ஏ. சொர்ணலிங்கம் அவர்கட்கும் திரு. ஏ. இருதயநாதன் அவர்கட்கும் 'பெண்களும் சட்டமும்' என்னும் தலைப்பில் சட்ட அறிவு புகட்டிய மனித உரிமை இல்லத்தின் இயக்குனராகிய ஷெரின் சேவியர், சட்டத்தரணிகளான திரு. என்.சிவானந்தராஜா திரு.பி.நவராஜ் அவர்கட்கும், 'பெண்களும் வன்முறையும் பற்றிய பயிற்சியை நடாத்திய கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி. அம்மன்கிளி முருகதாஸ் அவர்கட்கும் திருமதி பத்மாவதி யுமுனா இப்ராகிம் அவர்களுக்கும் இந்நூலைத் தொகுப்பதற்குத் தேவையான விடயங்களைத் தந்துதவிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

மேலும் கையேட்டுப்பிரதியை முழுமையாக்க உதவிய பயிற்றுனர்களுக்கும் எமது அரங்கத்தின் செயற்பாட்டில் உதவிவரும் நிர்வாகத்தினருக்கும், அரங்க உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் எமது விஷேட நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இத்திட்டத்தை வரைவதற்கு உதவிய குமுதினி, சாமுவேல் அவர்கட்கும் எம்முடன் இணைந்து அதிக சிரத்தை எடுத்து இந்நூலை ஆக்குவதற்கு உதவிய ஷெரின் சேவியர் அவர்கட்கும் மீண்டும் எமது நன்றிகள்.

<u>தலைவி</u>

**திருமதி. மேரி அற்புதமலர் பற்றிக்,**
**ஆசிரிய ஆலோசகர்,**
**பாதிப்புற்ற பெண்கள் அரங்கம்**
**ஆலையடிவேம்பு,**
**அக்கரைப்பற்று.**


noolaham.org | aavanaham.org

# 1. பயிற்சிநெறி பற்றிய பொதுத் தகவல்

## 1.0 பயிற்சி என்றால் என்ன ?

குறிப்பிட்ட விடையங்களைத் தெளிவுபடுத்துவதற்காக ஒரு குழு நிலையில் அல்லது குழுவாகச் சேர்ந்து பல விடயங்களைப் பற்றி விரிவாகவும், தெளிவாகவும் பகிர்ந்து கொள்ளுதல் ஆகும். இவைகளை மேலும் இரண்டு விடயத்தில் அடக்கலாம்.

1. கற்பித்த விடயத்தைத் தாமாகக் கற்றுக் கொள்ளுதல்
2. கற்பித்த விடயத்தில் உள்ள நுணுக்கங்களை ஆராய்ந்து அறிந்து கொள்ளுதல்.

குறிப்பிட்ட விடயத்தைப் பற்றிய பயிற்சிகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அவ்விடயம் பற்றிய பூரண அறிவும் தெளிவும் பெறப்படுகின்றது.

## 1.1. பயிற்சியின் நோக்கம்

பெண்கள் மத்தியில் இருந்து சமூக அமைப்பாளர்களுக்கான ஆளணியைத் திரட்டுவதும் அதன் மூலம் சமுதாயத்தில் பெண்களின் நிலையையும், பிறரில் தங்கியிராது தன்னிலே தான் தங்கியிருக்கும் அளவிற்கு அறிவையும், விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதாகும். சிறந்த தலைமைத்துவத்துடன் பெண்கள் செயற்படவும் சமூக, பொருளாதார, சட்ட ரீதியான உரிமைகள் பற்றி உணர்ந்து கொள்ளவும் ஆக்க பூர்வமாகச் செயற்படுத்தவும் பெண்களுக்கான வன்முறையை உணர்ந்து செயற்படுவர்.

சுய தொழில் மூலம் வருமானத்தைப் பெருக்கி வாழவும் தனிப்பட்ட முறையிலும், பொதுவாகவும் வன்முறைகள் ஏற்படும் போது அதனை எதிர்க்கவும், மாற்று வழிகளைக் கையாளவும், பெண்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் சமூக விழுமிய கருத்துக்களில் இருந்து தன்னை விடுபடச் செய்வதற்கும், மாற்றுவதற்கும் ஏற்ற வழி முறைகளைக் கையாண்டு சமூகத்தில் தொடர்ச்சியான சாதகமான மாற்றத்தை ஏற்படுத்திப் புதிய சமுதாயத்தை உருவாக்குவதே இப்பயிற்சியின் நோக்கமாக அமைகின்றது.

## 1.2. பயிற்சி நடாத்தும் முறை

இப் பயிற்சி நெறியானது பயிலுனர்களின் பங்கேற்பினை அதிகரிக்கச் செய்வதற்கும், ஈடுபடுவதற்கும் ஏற்ற வழி வகைகளைக் கண்டு கொள்ளுதலும் தேடுதலும், இதன் முக்கிய அம்சமாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப் பயிற்சியானது குழுக்கலந்துரையாடல், கட்புல செவிப்புல சாதனம் (ஓடியோ வீடியோ கண்காட்சி) சொந்த அனுபவங்களைப்பகிர்தல், சித்திரக் கண்காட்சி, நாடகங்கள் நடித்துக் காட்டுதல், திரைப்படம் பாடல் விமர்சனங்கள், விளையாட்டுக்கள், கவிதைகள், பழமொழிகள், விவாத அரங்கு போன்றவை பெண்களின் அபிவிருத்திற்குத் தடையாக உள்ள கருத்துக்களை எளிய நடைமுறையில் விருப்புடன் பங்கேற்றுக் கொள்ளக்கூடிய வகையில் பயன் பெறுனரின் தேவைக்கேற்றவாறு நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

## 1.3. பயிற்சி ஒழுங்கமைப்பு

பயிலுனர்களின் வசதிக்கேற்றவாறு பயிற்சி முகாம் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். பயிலுனர்கள் பரஸ்பர பரிமாறலினை ஏற்படுத்தக்கூடிய பொருத்தமான கற்கைச் சூழல் ஒன்றினை உருவாக்குவதற்கு ஏற்ற வகையில் பொருத்தமான இடம், தெரிவு செய்யப்படுதல் மிக அவசியம் போதிய இடவசதியும், காற்றோட்டமும், அமைதியான சூழலும், குழு வேலை செய்வதற்கு ஏற்ற ஒழுங்கமைப்பும் இருத்தல் பொருத்தமானது. அத்துடன் தேவையான, பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வசதியும் பயிலுனரின் வசதிக் கேற்ற வகையில் தங்குமிடம், உணவு, போக்குவரத்துக்கொடுப்பனவு என்பனவற்றை வழங்குவதன் மூலம் அவர்களை ஆர்வத்துடன் பங்கேற்கச் செய்ய முடியும்.

## 1.4. பயன்படுத்தப்படும் சாதனங்கள் (கற்பித்தல் உத்திகள்)

பயிற்சி நடைபெறும் போது பயிலுனர்கள் ஆர்வமுடன் கற்பதற்கும், இலகுவாக விளங்கிக் கொள்வதற்குமாக வளப் பகிர்வாளர்களினால் கற்பித்தலை மேம்படுத்துவதற்குக் கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்துவர். இதற்கு உண்மைப் பொருட்களையும், அதற்குப் பொருத்தமான அல்லது சார்பான ஒத்த இயல்புடைய பொருட்களையும் பயன் படுத்துவதுடன் கட்புல செவிப்புல சாதனங்கள் மூலமும் பாடல்கள், கவிதைகள், நடிப்பு ரீதியாகவும், விரிவுரைகள், கலந்துரையாடல்கள் விவாத அரங்குகள், விளையாட்டுக்கள் மூலமாகவும், சம்பவக் கற்கைகள் கருத்துக்கள், அனுபவப்பகிர்வுகள் போன்றவற்றின் மூலமும், கையேடுகள் வழங்குவதன் மூலமும் விளங்கிக் கொள்ள முடியும்.

இப்பயிற்சியை மேலும் சிறப்புற அமைப்பதற்கு கீழ்க் காணப்படும் பொருட்களைப் பயன்படுத்தி மேலும் இலகுவாக்கிக் கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கையேடுகள்
* நிற பேனாக்கள் - Colourpens
* தட்டச்சுக் கடதாசி - Typing Sheets
* பிலிப் (Flip) தாள்
* வெண் பலகை - White Board
* எழுது கோல் - Marker
* பிறிஸ்ரல் வோட் - Bristol Board
* கோவை - File
* இடுக்கிகள் - Clipps
* பசைக் களி -
* செலோட் டேப் - Cellotape
* சுவரொட்டிகள் - Posters
* குண்டுப்பின் - Pin
* துணிப்பந்து - Cloth Ball

**இச் சாதனங்கள் ஏன்? எதற்குப் பயன்படுத்தப் படுகின்றன?**

ஒவ்வொரு கற்பித்தலின் போதும் பயிலுனர்கள் சுயமாக பங்கேற்கவும், சிந்தனை வளர்ச்சியைத் தூண்டவும், இலகுவில் விளங்கிக் கொள்ளவும் ஏற்ற வகையில் இச் சாதனங்கள் கற்பித்தலை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

**இச்சாதனங்கள் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன.?**

பயிலுனர்களின் கல்வித் தரத்திற்கு ஏற்ப சாதனங்களைப் பயன்படுத்துதல் பொருத்தமானது. படித்த பயிலுனர்கள் இருக்கும் போது விரிவுரையும், கையேடுகளும், எண்ணக்கருக்களை விருத்தி செய்யப் பொருத்தமான முறையாகும்.

சராசரிக் கல்வித் தரத்தில் உள்ளவர்களுக்குத் திறனை வளர்ப்பதற்காகக் கட்புல செவிப்புல சாதனம், படங்கள், காட்சிப் பொருட்கள், குழுக் கலந்துரையாடல்கள் என்பவற்றின் உதவியுடன் தனியாகவும் குழுவாகவும் எண்ணக்கருக்களை வெளிப்படுத்தச் செய்வதன் மூலம் அறிவு, திறன் என்பவற்றை மேம்படுத்தச் செய்யலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வயது வந்தவர்களுக்கான பயிற்சி முறைகள்.

வயது வந்தவர்களுக்கான பயிற்சி அணுகு முறையானது பயிலுனர்களின் உண்மையான உலகைப் பற்றிய அறிவு. தகவல்கள் என்பவற்றின் மூலாதாரமாகத் தம்மைத் தாமே நோக்குதற்குத் தூண்டுகின்றது. தமது சுய அனுபவங்களால் கடமைபுரிய ஊக்கப்படுத்தப்படும் போது தமது சுழ்நிலையை மாற்றக் கூடிய உபாயங்களை அபிவிருத்தி செய்வதற்கு வழி வகுக்கின்றது.

பயிலுனர்களின் மனப்பாங்குகளையும் அனுபவங்களையும், சந்தர்ப்பங்களுக்கேற்ற வகையில் நெறிப்படுத்தும் நோக்குடன் கலந்துரையாடல்கள் அமைய வேண்டும். கலந்துரையாடல் விரிவுரையாக இருத்தல் கூடாது. கூடிய அளவு அந்த விடயத்தாக்கம் உள்ளதாக இருத்தல் வேண்டும்.

பொருத்தமான வினாக்களை வளப்பகிர்வாளர் வினவுவதன் மூலம் புதிய தகவல்களையும், அறிவையும், வெளிக்கொணரவும் புதிய கருத்துக்களை எடுத்துரைக்கவும் ஊக்குவிக்க முடியும். மேலும் இவர்கள் கூறும் கருத்துக்கள், அனுபவங்களனைத்தும் வெளியில் சென்று விமர்சிக்கப்படலாகாது என்பதைவளப்பகிர்வாளர் பயிலுனர்களிடம் எடுத்துரைத்து பயிற்சியை ஆரம்பிப்பது பொருத்தமாக இருக்கும்.

### 2.1. பயிலுனரை மையமாகக் கொண்ட கல்வி முறைக்கான வழிமுறைகள்

**2.1.1 தான் என்னத்தைக் கற்கவேண்டும் எவ்வாறு கற்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்காகப் பயிலுனர் ஈடுபடுத்த வேண்டும்.**

பெண்களின் சட்ட உரிமைகள் நிகழ்ச்சி நிரல் ஓர் தன்னிச்சையான நிரல். தாம் எதனை எவ்வாறு கலந்துரையாட வேண்டும் என் பதைத்தீர்மானிப்பதில் தாமும் பங்காளர் என்பதைப் பயிலுனர் உணர வேண்டும். இவ்வாறாக இந்நிகழ்ச்சி நிரல் பங்காளரது தேவைகளையும் அபிலாஷைகளையும் மையமாகக் கொண்டதாக அமைய வேண்டும். மேலும் இத்தேவைகளும் அபிலாஷைகளும் அவர்களால் இனங்காணப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 2.1.2. ஓர் சிநேகபூர்வமான பாதுகாப்பான, திறந்த மனப்பான்மையுடனான சூழலை உருவாக்கவும்.

பங்காளர்கள் சரிவர பங்குபற்றுவதற்கு அவர்கள் தமது அபிப்பிராயங்களும், அனுபவங்களும் மதிக்கப்படுகின்றன என்பதை உணரவேண்டும். இதனாலேயே பயிலுனரை மையமாகக் கொண்ட நிகழ்ச்சி நிரல்கள் சிநேகபூர்வமான திறந்த மனப்பான்மையுடனான சூழலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. நீங்கள் ஒரு குழுவுடனோ அல்லது தனிநபர்களுடனோ பணியாற்றினாலும் நம்பிக்கையும் பரஸ்பர நன்மதிப்பும் முக்கியமானவை.

பங்காளர்கள் தமது அனுபவங்களை பகிர்வதற்கு ஊக்கமளிக்கவும், உங்களது அனுபவங்களைப் பகிர்வதற்கும் தயாராகவிருக்கவும்,

பங்காளர்கள் "பாதுகாப்பாக" இருப்பதை உணர வேண்டுமாயின் கலந்துரையாடல்கள் குழுவுக்கு வெளியே பகிரங்கமாகாதிருக்க வேண்டும். நடத்துனர் இதனை ஆரம்பத்திலேயே கலந்து ஆராயலாம்.

## 2.1.3. கலந்துரையாடலை ஊக்குவிக்கவும்.

வெவ்வேறு நபர்கள் வெவ்வேறு அனுபவங்களைக் கொண்டுள்ளனர். நாம் எமது அனுபவங்கள் மூலமாக கற்றுக்கொள்கின்றோம் ஆயின் நாம் மற்றவர்களது அனுபவங்களிலிருந்தும் கற்றுக்கொள்கிறோம். முக்கியமாக அவர்களுக்கும் எமக்குமிடையில் பல ஒற்றுமைகள் இருக்குமாயின் நாம் இவ்வாறு கற்றுக் கொள்ளலாம். அதனாலேயே அனுபவங்களையும் கருத்துக்களையும் பரிமாறிக்கொள்ளல் கற்கை நெறியின் ஓர் முக்கியமான அம்சம் எனக்கருதப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தோர் பலர் கலந்துரையாடல் மூலமாகக் கல்வி பயில விரும்புகின்றனர். கலந்துரையாடல் விடயங்களைத் தமது சொந்த அனுபவங்களுடன் தொடர்பு படுத்த உதவுகின்றன. வெறுமனே ஒரு சொற்பொழிவுக்குச் செவிமடுத்தால், அதனுடன் நெருங்கி ஒன்றித்துப் போவதோ அல்லது எவரும் உங்களது கருத்துக்களில் அக்கறை கொண்டுள்ளனர். என்பதனை உணர்வதோ கடினமானது. அதே போல் உங்களது வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணபதற்கு நீங்கள் ஏதாவது செய்கிறீர்கள் என்பதனை உணர்வது கடினம்.

## 2.1.4. பெற்றோர் தமது சூழ்நிலைகளை அறிவதற்கும் அவற்றிலிருக்கும் பிரச்சினைகளைத்தீர்ப்பதற்குமான கற்கை முறைகளை உருவாக்க வேண்டும்.

பெண்களுக்கான இந்தச் சட்டக் கற்கை நெறியின் நோக்கம் பெற்றோருக்குத் தகவல்களைக் கொடுப்பது மட்டுமல்ல, ஆனால் தமது சூழ்நிலைகளை அறிந்து கொள்வதற்குமே யதார்த்த ரீதியானதும் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்வதற்குமான கற்கை நெறியே மிகவும் உபயோகமானது.

தமது வாழ்க்கையிலுள்ள உண்மை விடயங்களை ஆராய்வதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குக. தமது சொந்த அனுபவங்களுடன் தொடர்புபடுத்தி ஆராயும் பொழுதே வளர்ந்தோர் நன்கு கல்வி கற்கின்றனர்.

## 2.1.5. பங்காளர்களது தேவைகளையும் அபிலாஷைகளையும் மனதிற் கொண்டு உங்களது நிகழ்ச்சி நிரலை மாற்றத்தயாராக இருக்க வேண்டும்.

நீங்கள் ஏற்கனவே தீர்மானித்த ஒரு விடயத்தைக் கைவிட்டு வேறொரு விடயத்திற்குச் செல்வது ஒரு நல்ல அறிகுறியாகவிருக்கலாம். பங்காளர் தாம் விரும்பும் ஒரு விடயத்தையே விவாதிப்பதாகவும் கலந்துரையாடல் நன்கு அமைந்திருக்கின்றது என்பதையும் இது அறிவுறுத்தும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பினும் இக் கலந்துரையாடல் அங்கும் இங்குமாகக் குறிக்கோளின்றிச் செல்கின்றது என்பதனையும் காட்டலாம். அல்லது ஒருவருக்கோ அல்லது ஒரு குழுவுக்கோ விவாதிக்கப்படும் ஒரு விடயம் முக்கியமற்றதாக அமையலாம். இச்சந்தர்ப்பங்களில் குழுவுடன் கலந்தாலோசித்து இனி என்ன செய்ய வேண்டும் என்பதனைத்தீர்மானிக்க வேண்டும்.

குழுவில் என்ன நடக்கின்றது என்பதனை நீங்கள் உணர வேண்டும். பங்காளர் அமைதியற்று "வோர்" அடிக்கிறது என எண்ணிக்கொண்டிருந்தால் அதற்கான காரணத்தை அறிய முற்படுங்கள். அவர்ளுக்கு ஒரு இடை நேரம் அல்லது ஒரு மாற்றம் தேவைப்படலாம். நடக்கும் கலந்துரையாடல் அவர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தலாம். இவ்வாறு நடக்கும் பொழுது கலந்துரையாடலை நிறுத்தி நீங்கள் அவதானித்ததைப்பற்றிய கருத்தை தெரிவியுங்கள். அவர்கள் எதனைச் செய்ய விரும்புகின்றார்கள் என வினவுங்கள். தனிப்பட்ட கலந்துரையாடலிலும் சரி குழுக் கலந்துரையாடலிலும் சரி இந்த உணர்வு முக்கியமானது.

## 2.1.6. சுய உதவி பரஸ்பர உதவி ஆகியவற்றை ஊக்குவியுங்கள்.

அங்கத்தவர்கள் கூட்டங்களில் நடப்பவைபற்றிப் பொறுப்பேற்கும் பொழுது குழுக்கள் நன்றாகச் செயற்படுகின்றன. பல அங்கத்தவர்களிடம் வெவ்வேறு திறமைகள் காணப்படலாம். அவற்றைக் குழுவின் நன்மைக்காகப் பயன்படுத்தத் தயாராயிருப்பர்.

- ஒருவர் ஒரு கலந்துரையாடலின் சாராம்சத்தை வகுப்பதில் திறமை பெற்றிருக்கலாம்.

- இன்னொருவர் ஒரு கலந்துரையாடல் ஸ்தம்பித நிலையை அடையும் பொழுது கலந்துரையாடலை ஒரு புதிய விடயத்திற்கு திசை திருப்புவதில் திறமை பெற்றிருக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✡. கூச்சமுள்ளவர்களைக் கலந்துரையாடலில் பங்குபற்றச் செய்வதில் இன்னொருவர் திறமை பெற்றிருக்கலாம்.

✡. பங்காளர் பிரச்சனைகளைக் கொண்டுவரும் பொழுது அவற்றைப்பற்றிய பங்காளர் தமது கருத்துக்களைத் தெரிவிக்க அவர்களை ஊக்குவிக்கவும். உதாரணமாக "யாராவது இதனைப்பற்றி ஏதாவது கருத்துத் தெரிவிக்க விரும்புகிறீர்களா?" இவ்வாறான அணுகு முறை பெற்றோர்களின் அனுபவங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக அமைகின்றது. மேலும் பங்காளர்கள் தமக்குத்தாமே உதவ முடியும் என்ற கருத்தினைக் கூட்டத்தலைவா் என்ற ரீதியில் நீர் ஏற்றுக் கொள்வதாகவும் அமையும்.

## 2.2. பயிற்சி பெறுபவர்களுக்கான சாதகமான சூழல்-நடைமுறை வழிகள்.

பங்குபற்றுனர்கள் ஒவ்வொருவரினதும் கருத்துக்கள் மெறுமதியானவை என்பதனை ஒவ்வொருவரும் ஏற்று ஒவ்வொருவரின் கருத்துக்களுக்கும் மற்றவர்கள் செவிமடுத்து மதிப்பளிப்பதனூடாக அனைவரும் சிறப்பாகக் கற்றுக் கொள்ளும் சூழலை அல்லது சாதகமான சூழலை உருவாக்கிக் கொள்ளலாம் என்பதனை உணர்ந்து கொள்ளுதல்.

பயிற்சி பெறுபவர்கள் வெவ்வேறு பகுதிகளில் இருந்து வருபவர்கள். அவர்கள் ஒரு போதும் ஒரே சிந்தனை, ஒரே எண்ணம் உள்ளவர்கள் அல்ல. ஆகவே, அவர்கள் ஒவ்வொருவரின் மனநிலையைப் புரிந்து அறிந்து பயிற்சியை நடத்திச் செல்வோமானால் இப்பயிற்சியில் சாதகமான சூழலை அல்லது நடைமுறையை உருவாக்கிக் கொள்ளலாம். அத்துடன் இப்பயிற்சி மேலும் வெற்றி பெறுவதற்கும் வழி வகுக்கும்.

## வயது வந்தோரோடு பணியாற்றும் போது எழும் நடைமுறைப் பிரச்சினைகள்

### 2.2.1 விழுமியங்களை ஆராய்தல்

ஒரு விழுமியம் என்பது ஒருவர் தனது தினசரி வாழ்வை எப்படி நடைமுறைப் படுத்த வேண்டும் என்று உறுதியாக கொள்ளப்பட்ட நம்பிக்கை எங்கள் விழுமியங்கள் எங்கள் தீர்மானங்களில் தாக்கத்தை ஏற்படுத்தும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி நிகழ்வில் பங்குபற்றுவோர் தமது செயற்பாடுகளின் அடிப்படையை விபரிக்க விழுமியங்கள் என்ற பதத்தை அச்சொட்டாகப்பாவிக்காமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் அதற்குப் பதிலாக ''நம்பிக்கை'' ''சரி - பிழை'', ''உண்மையாக நினைத்தல்'' ''உறுதியாக உணர்தல்'' போன்ற இன்னோரன்ன பதங்களைச் சொற்றொடர்களைப் பயன்படுத்தலாம்.

விழுமியங்களை ஆராய்வது மிகவும் சிக்கலானதாகும். பங்குபற்றுவோரை அவர்களது நம்பிக்கைகளைக் குறித்துப் பேசும்படி உற்சாகப்படுத்தி அவர்கள் விழுமியங்கள் என்று

என்னத்தைச் சொல்கிறார்கள்

என்னத்தை மதிப்பிடுகிறார்கள்

இதில் அவர்களுடைய தெரிவுத தகுதியைப் பாதிக்கும் வெளிச்சக்திகள்

இச் செயற்பாடுகளை எவ்வாறு தொடர்ந்து முன்னெடுப்பது.

என்பவற்றுடனான தொடர்புகளைக் கண்டுகொள்ளல்.

இதைச் செய்வதற்கு ஒருவழி யாதெனில், பங்கு கொள்வோர் வளரும் போது அனுபவம் சம்பந்தப்பட்ட விடயங்களைத் தாங்கள் தொடர்ந்து பாவிக்க விரும்பும் விழுமியங்களோடும் தாங்கள் என்ன காரணத்திற்காக மாற்றத்தை விளக்கியதையும் தொடர்பு படுத்திப்பார்ப்பதாகும். பின் வரும் கேள்விகள் ஓர் உயிர்ப்பான ஆராய்தலை ஏற்படுத்தலாம்.

1. இவ் ''விழுமியங்கள்'' பற்றி எங்ஙனம் நீர் வளரும் போது கற்றுக் கொண்டீர்கள்? (அதாவது யார் உமக்கு கற்பித்தார்? அவர்கள் எப்படிச் செய்தார்கள்)

2. நீர் என்ன கற்றீர் ?

3. உமது சகோதரர்கட்கும், பிள்ளைகளுக்கும் கற்பிக்கும்படியாக நீர் என்ன கற்றீர்?

4. உம்மில் மிகவும் தாக்கத்தை உண்டாக்கிய நம்பிக்கை யாது?

5. எந்தச் சக்திகள் அல்லது நிபந்தனைகள் உமது வாழ்வில் விழுமியங்களை நடைமுறைப்படுத்துகையில் பாதிப்பை ஏற்படுத்தலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாளர் என்ற முறையில் உங்கள் சொந்த விழுமியங்கள், நடக்கின்ற சில விடயங்கள் தொடர்பாக உங்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கலாம். இத்தகைய நிலைமைகளை எதிர்கொள்வதற்குப் பின்வரும் முறையில் உங்களைத் தயார்படுத்திக் கொள்ளலாம்.

※. விழுமியம் சம்மந்தமாக எழக்கூடிய சில பிரச்சனைகளை முன் கூட்டியே சிந்தித்தல். உதாரணமாக விதவை கர்ப்பவதியாதல்.

※. பிரச்சனையையும், அதற்கான காரணத்தையும் அணுக உகந்த வழிமுறையை அடையாளம் கண்டு, இந்தப் பிரச்சனையை ஆக்க பூர்வமாகக் கலந்துரையாடல்.

※. ஒவ்வொரு நிகழ்ச்சிக்கு முன்பும் உங்களையே ஐந்து கேள்விகள் கேட்டுக் கொள்ளுங்கள்.

1) இக்குழுவோடு தொடர்பு கொள்ளும் போது நான் முகம் கொடுக்க வேண்டிய பிரச்சனைகள் யாவை ?

2) ஒவ்வொரு பிரச்சனை சம்பந்தமாக எனது விழுமியங்கள் யாவை?

3) இத்தகைய பிரச்சனைகள் எழும்பட்சத்தில் அதைக்கையாள உமது நிறுவனத்தால் கொடுக்கப்பட்ட சிபாரிசுகள் என்ன?

4) இத்திட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரச்சனையையும் நான் எப்படி, எப்போது கையாள வேண்டும்.

5) எனது விழுமியங்களையும் அபிப்பிராயங்களையும் நான் உடனடியாக வெளிப்படுத்த வேண்டுமா? இது எவ்வளவிற்கு அக்குழுவைப் பாதிக்கும்?

ஒரு குழுவில் தமது விழுமியங்களைக் கூற எது தகுந்த நேரம் என்பதைத் தலைவர்கள் சிந்திக்க வேண்டும். ஒரு தலைவர் ஒரு திடமான மதிப்பீட்டை வைத்துத் தனது அபிப்பிராயத்தை உறுதி வாய்ந்த முறையில் வெளிப்படுத்தும் போது இதற்கு இணங்காத குழு அச்சமூட்டப்படுவதையோ அல்லது குறைத்து மதிப்பிடப்படுவதையோ உணரலாம். இதன் பலனாக இக்கலந்துரையாடலில் அவர்கள் பங்குபற்றுவது அவர்களுக்கு அசௌகரியமாகலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவமிக்க தலைவர்களது கருத்தின்படி பங்குபற்றுபவர்கள் பொருத்தமற்ற நம்பிக்கைகளை வலியுறுத்தும் போது, அதைத் தலைவர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

- கருத்துக்கள் வரவேற்கப்பட்டதைப் புரிந்துகொள்ளுங்கள்.

- இதுபற்றி இன்னும் விரிவாக இந் நிகழ்ச்சியின் பின்பு தனிமையில் கதைப்பதாகக் கூறுங்கள்.

அந்தரங்கத்தைக் காப்பதில் நம்பகத்தன்மையும், அறிக்கையிடுவதில் பேணப்பட வேண்டிய பொறுப்புக்கள்.

பெரும்பாலானோர் அவர்கள் பேசுவதை அப்பிரிவில் உள்ள மற்றவர்கள் வேறு இடங்களில் திரும்பிச் சொல்வார்கள் என்பதை நினையாமல் தங்களின் விழுமியங்களையும், நடத்தைகளையும் பற்றிய தகவல்களைப் பகிர்ந்து கொள்கின்றார்கள்.

முதல் பாடத்தில் அடிப்படை வசதிகளைக் கூறும் போது நம்பகத்தன்மை தொடர்பான விடயத்தையும் கருத்திற்கு எடுப்பது சிறப்பானதாகும். இங்கு குழுவில் நடக்கும் கலந்துரையாடல்கள் குழுவுக்குள்ளேயே இருத்தல் வேண்டும் என்று இங்கு தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

இந்த விடயத்தில் தலைவரின் கட்டுப்பாடுகளைத் தெளிவாக்கிக் - கொள்வது பங்கு கொள்பவரின் தேவையாகும். பெண்களைத் துஷ்பிரயோகம் செய்யும் நிலமைகளிலும் அவர்களுக்குத் தேவையான உதவியினைப் பெறுவதற்கும் இக் கட்டுப்பாடுகளில் பங்கு கொள்வோர் அறிந்து கொள்வதற்கு உதவ வேண்டும்.

சட்டத்திற்கு அமைய நடக்க வேண்டும் என்ற அர்ப்பணிப்பை அறிந்து கொண்டு பங்குபற்றுவோர் விளங்கக் கூடியதாக அவர்களை அனுசரித்துக் கொண்டு அக்கறை உள்ள பிரச்சனைகளை எடுத்துக் கலந்துரையாடல் மூலம் உங்கள் தகவல்களை முன்வைக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அந்தரங்க நம்பகத்தன்மை ஆகியவற்றில் கையாள வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் ஏற்கெனவே உங்கள் பதில்களை உங்களுக்கு அனுசரணை வழங்கியவற்றுடன் இணைந்து முன் கூட்டியே தயார் செய்து வைத்தல் எவ்வாறெனில் எந்த சூழ்நிலைகளிலும் இப்பிரச்சனைகளைக் கையாளக்கூடியதாக இருக்கும்.

## 2.2.3. இணை உதவுகை (பங்காளருடன் பணி புரிதல்)

பல காரணங்களுக்காக நீங்கள் குழுக்களுக்கான கூட்டங்களை யாருடனும் இணைந்து நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கத் தீர்மானிக்கலாம். ஒரு இணை உதவியாளர் குழு பல்வேறு இணைப்புக்களைக் கொண்டிருக்கலாம்.

### இணை - உதவுகையில் அனுகூலங்கள்

இரு தலைவர்களினதும் வித்தியாசமான திறமைகளும் ஒரு கூட்டத்தில் பாவிக்கப்படலாம் இது பொருள் அடக்கத்தையும், பங்கு பற்றுதலையும் சமப்படுத்தும்

- ஒரு தலைவர் தனிப்பட்ட பிரச்சனைகளில் கவனம் செலுத்தலாம் மற்றய தலைவர் குழுவோடு தொடர்ந்து வேலை செய்யலாம்.

- இணை உதவியளிப்பவர்கள் பணி நிலைமைகள் தொடர்பில் ஒருவர் ஒருவரிடம் இருந்து கற்றுக்கொள்ளலாம். யோசனை, வழிமுறை போன்றவற்றுக்கு ஒருவர் ஒருவரிடம் தங்கியிருக்கலாம்.

- ஒருவர் குழுவோடு முழுமையாக ஈடுபட்டிருக்கும் போது மற்றவர் நேரத்தோடு கண்ணாயிருப்பதால் செயற்பாடுகளை இலகுவில் அளவு செய்யலாம்.

இள வயதுக் குழுவினரோடு பணியாற்றுகையில் உதவுபவர் களைத்துப் போகலாம். இணை உதவுதலில் தலைவாகள் இளம் வயதாக பங்குபற்றுவோரின் தேவைக்கேற்றவாறு தன சக்தியைக் களைப்பின்றிச் செலவிடலாம்.

## இணை உதவுதலுக்கு சவால்கள்

- மற்றவர்களுடன் தொழிற்பாட்டு உறவினை மேம்படுத்துவதற்கு இணை உதவுதலுக்கு மேலதிக சக்தி தேவைப்படுகின்றது.

- கூட்டு உதவுபவர் பிரதேச தலைவியாகவோ அல்லது கனிஷ்ட தலைவியாகவோ மாறுதலுக்கான தூண்டுதல் ஏற்படலாம். இது அனேகமாக முரண்பாடுகளுக்கும், தீய உணர்வுகளுக்கும் வழி வகுக்கும். ஓர் அனுபவமுள்ள தலைவி விடயங்களில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றிக் காரசாரமான அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கலாம் அவ்வளவு அனுபவமில்லாத தலைவி தன்னுடைய பங்காளிக்குச் சாதகமாகத் தன் எண்ணங்களைக் கைவிடலாம்

- தானே சிரேஷ்ட தலைவியாக வேண்டும் என்ற விருப்பு ஏற்படலாம் சில சமயம் சில தனி நபர்களுக்கு ஏற்படலாம்.

- பங்குபற்றுபவர்களை முடிந்த அளவிற்குப் பேசத் தூண்டாமல் இரு தலைவிகளும் தாமே கூடுதலாகப் பேசிக் கொண்டிருக்கலாம்.

- இரு குழுத் தலைவிகளும் வெவ்வேறு பாணிகளிலும் வெவ்வேறு வேகங்களிலும் செயற்படலாம்.

பின்வரும் வழிகாட்டல்கள் தலைவிகள் இணை உதவுவோராகவும் செயற்பட உதவலாம்.

- குழுக்களுடன் உம்முடைய கடந்த கால அனுபவங்களை விளக்கி நீ இணை உதவுபவராகச் செயற்பட்டீர் என்பதையும் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உங்களுடைய பலம், பலவீனம் ஆகியவற்றை ஒருவர் ஒருவருடன் கூடி ஆராய்ந்து ஓரணியாகச் செயற்பட உதவலாம்.

- ஒன்று சேர்ந்து குறிக்கோளை நிர்ணயிக்கவும் நீங்கள் இருவரும் ஒரே விடயத்தை நோக்கமாகக் கொண்டிருப்பின் கூட்டாகச் செயற்படுதல் இலகுவாக இருக்கலாம்.

- எவர் எதற்குப் பொறுப்பு என்பதைத் தீர்மானித்து உங்களது அலுவல்களைக் கூட்டாகத் திட்டமிடுங்கள்.

- ஒருவர் மற்றவருக்கு எப்பொழுதும் கை கொடுத்து உதவ வேண்டும். அதாவது எப்பொழுது தலைவிக்கு உதவ வேண்டும் என்பதையும் தீர்மானியுங்கள்.

- ஒருவர் மற்றவருடன் நேர்மையாக நடந்து கொண்டு முடியுமான பொழுதெல்லாம் கலந்தாலோசியுங்கள்.

**03. <u>பயிலுனர்களை இனங்காணல்</u>**

எமது சமூகத்தில் உள்ள பெண்களின் மத்தியில் சென்று தனித்தனியாகவும், சிறு குழுக்களின் மூலமும் கலந்துரையாடி. அவர்களின் நிலையை அறிந்து கொள்ள வேண்டும் கலந்துரையாடலானது நீண்ட இக்காலம் அவர்களுடன் தொடர்பு வைத்து ஒவ்வொருவரின் சூழல், மனநிலை, தேவைகள், பிரச்சனைகள், ஒற்றுமை இன்மை என்பவற்றிற்கு ஏற்ப அவர்களை அணுகிக் கலந்துரையாட வேண்டும்.

காலப் போக்கில் அவர்களின் தேவையை இனம் கண்டு அவர்களாகவே உணர்ந்ததன் பின்னர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டும். பின்தங்கிய சமூகம் ஆதலால் ஒற்றுமை இன்மை அவர்களுக்கு பின்னடைவை ஏற்படுத்துகின்றது. இத்தரவுகள் வெளிக்கள ஊழியர்களால் சேகரிக்கப்பட்டு அமைப்பின் ஊடாகச் செயல் வடிவம் பெறல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03.1. சக்தித் திட்டத் தொடர்பு

கிழக்கு மாகாணத்தின் அம்பாரை மாவட்டத்தில் உள்ள அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு என்னும் பிரதேசத்தில் பாதிப்புற்ற பெண்கள் அரங்கம் அமைந்துள்ளது. இது பின்வரும் சமூக அமைப்புக்களுடனும் தொடர்பு கொண்டுள்ளது. மகாசக்தி, வூஸ்க், சர்வோதயா, சுவாட், சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், மன்று, சோசா, அல்குறைஸ், சில்வஸ்ரோன், இந்து இளைஞர் அமைப்பு, கிழக்குப் பிராந்திய பெண்கள் கூட்டமைப்பு, என்பனவாகும். நாட்டின் ஏனைய பாகங்களில் இயங்கும் மனித உரிமைகள் சமுதாய அமைப்புக்கள் என்பவற்றுடனும் தொடர்புண்டு. (உதாரணமாக மனித உரிமைகள் இல்லம், பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், குடும்பப் புனர்வாழ்வு நிலையம்) சக்தித் திட்டத்திற்காக குவேக்கரும் சமாதான சேவையுடன் தொடர்பு ஏற்பட்டுச் சக்தித் திட்டம் எழுதப்பட்ட விண்ணப்பம் இவர்கள் மூலம் சீடா நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

இவ் விண்ணப்பத்தினை ஏற்றுக் கொண்ட 'சீடா' நிறுவனம் பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்துடன் தொடர்பு கொண்டது. சக்தித் திட்டமானது பெண்களை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதால் இப் பயிற்சி நெறியானது எமது கிராமத்தின் பெண்களுக்கு மிகவும் பயனுடையதாய் இருந்தது பெருமைக்குரியதாகும். இத் திட்டத்தை நடைமுறைப்படுத்திய 'சீடா' நிறுவனம் எமது பிரதேசப் பெண்களின் தேவையை நிறைவேற்றுவதில் பெரும் பங்களிப்பு செய்துள்ளது. என்பதும் அமைப்பின் வளர்ச்சிக்கு அலுவலகத்தளபாடங்கள், நூல் நிலைய உபகரணங்கள், தட்டச்சுக்கள் என்பன வழங்கி ஊக்குவித்தமையும் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

இது போன்ற பயிற்சி மேலும் நடாத்துவதற்கு நிதி உதவி வழங்குபவர்களுடன் தொடர்பு கொள்ளும் போது பின்வரும் வினாக்களைப் பயன்படுத்தவும்.

01. இலக்குக் குழு யார்?
02. எத்தனை பயிற்சி வகுப்புக்களை நடாத்துவீர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. பயிற்சியில் பங்கு பெறுவதற்குக் கொடுப்பனவு வழங்க முடியுமா?

04. பயிற்சி முடிந்த பின் மீளாய்வு செய்ய முடியுமா?

**3.2. இலக்குக் குழுவை அடையாளம் காணல்**

பயிலுனர்களை மையமாகக் கொண்ட இப் பயிற்சி நெறியில் பயிற்சி வழங்கப்படும் குழுவில் குறிப்பிட்ட வயதை அல்லது அண்ணளவான வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும். இவர்களின் வயதெல்லை ஒரே அளவுடையதாக இருப்பதனால் இவர்களின் குழு வேலைகளின் போது இணைந்து செயற்பட முற்படுவார்கள். அத்துடன் பயிற்சி வழங்குவது இலகுவாக இருக்கும்.

மேலும் பயிலுனர்களின் கல்வித்தகைமை அல்லது வயதெல்லை ஒரே மட்டத்தில் இருப்பதனால் எல்லோரது செயற்பாடும் அண்ணளவாக ஒத்த செயற்பாடுடனும் கற்றல் / கற்பித்தல் இலகுவானதாகவும் காணப்படும். அத்துடன் இவர்களது குடும்ப நிலையானது அல்லது குடும்ப அந்தஸ்து ஒரே மட்டத்தில் இருப்பதனால் அவர்களின் உள நிலையில் மாற்றம் ஏற்படாது செயற்பட முடியும்.

**வேறு பயிலுனர்கள் இப் பயிற்சிக்கு வர விரும்பினால் நீங்கள் என்ன செய்வீர்கள்?**

வேறு பயிலுனர்கள் இப் பயிற்சிக்கு வர விரும்பினால் அவர்களைத் தனியாக ஒன்று சேர்த்து அவர்களைச் சிறு குழுக்களாகப் பிரித்து இப்பயிற்சியில் இருந்து பயிற்சி பெற்ற பயிலுனர்களைக் கொண்டு பயிற்சி வழங்குவதற்கு வழி வகுக்க முடியும். இவ்வாறு செயற்படுவதனால் பயிற்சி பெற்றவர்கள் தாங்களும் வளர்ந்து புதிய சமூகத்தை உருவாக்குவதற்கு வழி வகுக்கலாம்.

**03.3. ஏன் இத்தொகையைத் தெரிவு செய்தீர்கள்**

பயிற்சியைப் பெறும் ஒரு குழுவில் குறைந்தது 25 - 30 பயிலுனர்கள் இருத்தல் வேண்டும். இதில் 5 அல்லது 6 பேர்களைக் கொண்ட 4 அல்லது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 குழுக்களை அமைத்தல் வேண்டும். இக் குழுக்களில் இத்தொகை இருப்பதற்கு காரணம் குழுச் செயற்பாட்டின் போது இலகுவில் சுயமான கலந்துரையாடலுக்கு இட்டுச் செல்ல முடியும் என்பதும் சிறந்த கருத்துக்களை வெளிக் கொணரவும் விளங்கிக் கொள்ளவும் முழுமையாக பங்கு கொள்ள முடியும் என்பதுமே இத்தொகையினைத் தெரிவு செய்யக் காரணமாக அமைந்தது.

## 03.4. தெரிவு செய்யப்படுபவரின் வசிப்பிடச் சூழல்

இப்பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுபவர்கள் மிகவும் வறுமையான குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவும் சமூகத் தொடர்புகள் அற்ற நிலையிலும் பால் நிலை அசமத்துவ எண்ணக்கருக்கள் உள்ள சமூகத்தில் வாழ்ந்தவர்களில் இருந்தும் கல்வியை இடைநிறுத்தியவர்களும். பொருளாதார அபிவிருத்திபற்றிய சிந்தனை குறைவாகக் காணப்பட்ட பெண்கள் மத்தியில் இருந்தே தெரிவு செய்யப்படல் வேண்டும்.

## 03.5. பயிற்சிக்கான இடத்தைத் தெரிவு செய்தல்

பயிற்சி நடைபெறும் போது பயிலுனர்கள் வந்து செல்வதற்கு இலகுவாகவும், போக்குவரத்து வசதிகள் உள்ளதும். மக்கள் நடமாட்டம் குறைவானதும், அமைதியான சூழலும் காற்றோட்ட வசதி உள்ளதுமான இடத்தைத் தெரிவு செய்வதோடு தங்குமிடவசதி, நீர், மலகூடம் என்பன உள்ளதுமான சுகாதாரத்தைப் பேணப்படும் இடமாகவும் அமைதல் வேண்டும்.

## 03. 6. பயிற்சியை எளிதாக்குவதற்கான வழிமுறைகள

பங்கு பற்றுனர்களுக்குப் பயிற்சி நடைபெறும் காலங்களைப் பற்றிய முன்னறிவித்தலை உரிய காலத்தில் கடித மூலமாகவோ, அல்லது நேரடியாகவோ, கூறுதல் அவசியமாகும். அத்துடன் பயிற்சி நடைபெறும் காலங்களில் பயிலுனர்களுக்கான பிரயாணச் செலவு, உணவு என்பன வழங்கப்படுவதோடு அவசியமான காலங்களில் தங்குமிட ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படுதல் அவசியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பயிற்சியினை எளிதாக்குவது அல்லது இலகுவாக்குவது வளப்பகிர்வாளர்களின் கையிலேயே தங்கியுள்ளது. இப்பயிற்சியை மேற்கொள்ளும் போது பயிலுனர்களின் நிலை அறிந்து அவர்களுக்கு ஏற்ற வகையில் உண்மை அனுபவங்களின் ஊடாகவும் சம்பவக் கற்கைகளைக் கொடுத்து அதனை ஆழமாக ஆராய்வதன் மூலமும் திரைப்படங்கள் அல்லது படக்காட்சிகள் மூலமும் கற்பித்தலை மேற்கொள்ளுதல் வரவேற்கத்தக்கது. பயிலுனர்கள் நாடகம் நடித்தல், கவிதை எழுதுதல், சித்திரம் வரைதல், பாடல்கள் இயற்றுதல் போன்ற முறைகளின்மூலமும் குழுக்களாகச் சேர்ந்து குறிப்பிட்ட விடயத்தைப்பற்றிய கலந்துரையாடல் வைப்பதன் மூலமும் பயிற்சியை இலகுவாகப் புரிந்து கொள்ளவும் விளங்கிக் கொள்ளவும் ஆர்வமுடன் பங்கு கொள்ளவும் முடியும்.

## 03. 7. தொடர்ச்சியான பங்களிப்பு

01. பயிற்சி திருப் தியாக இருந்தது என்பதற்கான காரணத்தை ஆராய்ந்து அறிதல்.

02. பயிற்சி திருப்தி இன்மையாக இருந்தது என்பதற்கான காரணத்தை ஆராய்ந்து அறிதல்.

இப்பயிற்சி நடத்தப்பட்ட முறையானது இலகுவானதும் சாதகமான சூழலாகவும், தேவையை நிறைவு செய்யக்கூடியதாகவும் இருத்தல் அவர்கள் தொடர்ச்சியாக பங்குபற்றுவதற்கும் காரணமாக இருந்தது.

- வளப் பகிர்வாளர் பயிலுனர்களைப் பங்கு பெற வைத்தல்
- பயிற்சியில் எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் கொடுத்தல்.
- பயிலுனர்களின் விருப்பு வெறுப்பிற்கேற்ப அவர்களைத் தூண்ட வைக்கும் யுத்தி முறைகள்.
- எளிய சொற்பிரயோகம், கற்பித்தல் முறைகள் இலகுவானதாக இருத்தல்.
- கருத்துக்களை வெளிப்படுத்தும் போது அவர்களின் கருத்துக்களை ஏற்றுக் கொண்டு மேலும் அவர்களை ஊக்குவித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✷. குழுவிற்கு ஏற்றவாறு பயிற்சி முறையை மாற்றி அமைத்தல் அல்லது தெரிவு செய்தல். அதில் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பமும், முன்னுரிமையும் அளித்தல்.

✷. பயிலுனர்கள் ஒழுங்கற்ற முறையில் பயிற்சிக்குச் சமூகமளித்தால் அதற்கான காரணங்களைக்கண்டறிதல்.

✷. மனத்தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் வினாக்களை வினவுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

## 04. பயிற்சியைத் திட்டமிடல்.

பயிற்சியைத் திட்டமிடல் என்னும் விடயத்தின் கீழ் பின்வரும் தலைப்புகள் பற்றி ஆராய்தல் வேண்டும்.

01. யாருக்கு ?
02. எதற்காக ?
03. எதனை ?
04. மீளாய்வு

மேற்கூறும் விடயங்களைப் பற்றி விரிவாகவும் எளிதாகவும் விளக்கம் கொடுக்கப்படுகின்றது.

### 04. 1. யாருக்கு

எமது சமூகத்தில் உள்ள பெண்களின் வாழ்க்கைத் தரமானது பின்தங்கிய நிலையில் காணப்பட்டதைச் சமூக சேவையாளர்கள் இனங்கண்டனர் அவர்களை சிறு சிறு குழுக்களாக அமைத்து அடிக்கடி கலந்துரையாடிய போது பெண்கள் தலைமைத்துவம் வகிக்கும் தன்மையானது குறைவாகக் காணப்பட்டது. மேலும் குறிப்பாகத் தொழில் புரியும் பெண்கள் பால்நிலை வன்முறைக்கும், பாலியல் வன்முறைக்கும் உட்பட்டிருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. இவர்களின் அறியாமையின் காரணமாக இதற்கான சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்பதையும் இவர்கள் அறிந்திருக்க வில்லை. இதன் காரணமாகப் பாதிப்புற்ற பெண்கள் அரங்கம் பின்வரும் பயிற்சிகளைத் திட்டமிட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பெண்களும் தலைமைத்துவமும்

02. பெண்களும் வன்முறையும்

03. பெண்களும் சட்டமும்.

இப்பயிற்சியானது யுவதிகள் மட்டத்தில், நடுத்தரவயதுடைய குடும்பப் பொறுப்பை ஏற்று நடக்கும் பெண்கள் மத்தியிலும் நடாத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

## 04. 2. எதற்காக

இதுவரையில் எதுவித பயிற்சியையும் எடுக்காதவர்களுக்கு இது ஒரு முதல் அனுபவமாகும். இப் பயிற்சி நெறியின் மூலம் பெண்கள் சகல விடயங்களிலும் விழிப்புணர்வடையவும், உண்மை அனுபவங்களை உணரவும், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கவும் வழிவகுக்கின்றது. நமது நடைமுறையில் உள்ள சாதக, பாதகமான நிலைகளை உணர்ந்து அதை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க முன் வருவர். வன்முறைகளின் வடிவங்களையும், இதற்கான எதிர் நடவடிக்கைகளையும் பெண்களின் உரிமைகளையும் சட்ட ரீதியாக்க காணப்படும் நன்மைகளையும் அறியக்கூடியதாக உள்ளது. பெண்கள் தற்துணிவு, தற்கணிப்பு, தன்னம்பிக்கை, வலுவடைதல் என்னும் படிமுறையில் தங்களை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதற்காகவும் இப் பயிற்சி வழங்கப்படுதல் வேண்டும்.

## 04. 3. எதனை (இனங் கண்ட தேவைகள்)

01. பெண்களும் தலைமைத்துவமும்

02. பெண்களும் வன்முறையும்

03. பெண்களும் சட்டமும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Peegy Arul

05. **கண்காணிப்பு மீளாய்வு**

அமர்வின் பெயர் :-

திகதி :-

பங்குபற்றுனரின் விபரம் :-

வயது (அண்ணளவாக) :-

பால் :-

கல்வி மட்டம் :-

திருமண அந்தஸ்து :-

01. இப் பயிற்சியில் நீங்கள் கற்றவை எவை

02. புதிய அறிவு (புதிய தகவல்கள், கருத்துக்கள், எண்ணக்கருக்கள்)

03. புதிய விளக்கங்களும் உணர்வுகளும் கிடைத்ததா?

04. புதிய திறன்கள் (வாழ்க்கைக்குப் பயன்படுத்தக்கூடியதாகக்) கிடைத்ததா?

05. உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறியுள்ளதா ?

06. பாட விடயங்கள் தொடர்புள்ளதாக / தொடர்பற்றதாக இருந்ததா?

07. பயிற்சியின் கால அளவு போதுமானதா?

08. பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை பற்றிய உமது கருத்து யாது ?

09. பயிற்சி வடிவமைப்பு, பயிற்சி முறைகள், சுவாரஸ்யமானதா?

10. உணவு, வதிவிட ஏற்பாடுகள் திருப்திகரமானதா?

11. பௌதீக சூழ்நிலை கற்பதற்குச் சாதகமாக இருந்ததா? தடையாக இருந்ததா?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5.1. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் [VIOLENCE AGAINST WOMEN]

**பயிற்சித் திட்டம் :-**

## நோக்கங்கள்:

இன்று உலகில் எந்த நாடுகளாயினும் சரி பெண்களுக்கெதிரான வன் முறைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. வீடுகளிலும் வீட்டுக்கு வெளியே பெண்கள் நடமாடுமிடங்களிலும் வேலைத்தலங்களிலும் வன்முறைகளை எதிர்கொள்ளுகின்றனர். முக்கியமாக கீழைத் தேசங்களிலும் பெண்கள் பிறத்தல் என்பது இழிவானதாகவும், சுமைநிறைந்ததாகவும் கருதப்படுவதால் அவர்களைக் கருவிலேயே அழித்தலும் நிகழ்கிறது. பிறந்தபின் இந்த நிலை அவளது கல்வி, சுகாதாரம், வளர்ப்புமுறை, திருமண வாழ்க்கை என்பனவற்றில் தொடர்கின்றன. அடித்தல், எரித்தல், கொலை செய்தல் என்பன சர்வ சாதாரணமான நிகழ்ச்சியாகியுள்ளது.

இலங்கையின் இன்றைய சூழலில் யுத்த சூழ்நிலைகளில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இரட்டிப்பாகின்றன. ஓர் சமூகத்தை மானபங்கப்படுத்துவது என்ற கருத்தின் காரணமாகவும் பெரும் அனுபவத்திற்கு உரியவள் எதிர்க்கப் பலமற்றவள் என்ற கருத்தியலின் அடிப்படையிலும் இந்த யுத்த சூழ்நிலையில் பெண்கள் பலர் பாலியல்வல்லுறவுகளுக்கு உட்படுத்தப்படுவதும், கொலை செய்யப்படுதலும் நிகழ்கின்றன.

வன்முறைக்கு உள்ளான பெண்கள். உடல்ரீதியாகவும் உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர், பாதிக்கப்படுகின்றனர். இவர்களை முன்னெச்சரிக்கையாக இருக்கச் செய்வதற்கும், பாதிப்புக்கு உள்ளானவர்கள் சரியான முறையில் வழிநடத்தவும் இப்பயிற்சி உதவும்.

### 01. பயிற்சி நடைமுறையை ஆரம்பித்தல்:

**நோக்கம்:**

பங்கு பற்றுவோரும். வளப்பகிர்வாளரும் தம்மை அறிமுகப்படுத்தல்.

நேரம் : 30 நிமிடம்

**தேவையான பொருட்கள்:**

பெரிய பந்து, விசாலமான இடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. முதலில் 10 நிமிடங்களுக்கு ஒவ்வொருவரும் ஒருவருடன் ஒருவர் உரையாடி அறிந்து கொள்ளவிடுதல்.

2. பின்னர் வட்டமாக உள் நோக்கி நின்று வளப்பகிர்வாளர் நடுவில் நின்று கொண்டு கையில் ஒரு பந்தை வைத்துக் கொண்டு மாறி மாறி எறிதல்.

அ ஆ

ஔ இ

(உ+ம) ஓ ஈ

* வளப்பகிர்

ஒ வாளர் உ

ஐ ஊ

ஏ எ

எறியும் போது பந்தைப் பெறுபவர். தனக்குப் பக்கத்தில் உள்ளவரின் பெயரையும் வேலை செய்யும் நிறுவனத்தையும் கூறுவதுடன் அவரின் விருப்பு வெறுப்புகளையும் கூற வேண்டும். அவ்வாறே எல்லோரும் கூறுவதாக அமைத்துக் கொள்ள வேண்டும். வளப்பகிர்வாளரும் சேர்ந்து கொள்ளல் அவசியம் இதற்கு 20 நிமிடங்கள் எடுக்கலாம்.

பங்குபற்றுவோர் தொகை : 20 - 25 இற்கு இடையில் விரும்பத்தக்கது

பயிற்சித் திட்ட ஆரம்ப நேரம் : 60 நிமிடம்

தேவையானவை : 5" x 3" அட்டைகள்

1. பங்குபற்றும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்று பல நிறங்களில் இருக்கலாம்.

2. நிறப் பேனாக்கள் விரும்பியதைத் தெரிவு செய்யலாம்.

**கொடுக்கப்படும் வேலை:**

1. பங்குபற்றும் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட தலைப்புத் தொடர்பாக எதிர்பார்க்கும் விடயங்கள் ஐந்தினை அட்டைகளில் எழுதுமாறு பணித்தல்.

2. 10 நிமிடங்களின் பின் அட்டைகளைப் பக்கத்தில் இருப்பவருக்கு மாற்றும்படி கூறல்.

3. மாற்றியபின் 5 அட்டைகளை ஒன்றிணைத்துப் பொதுவான விடயங்களை ஒன்று சேர்த்து மீண்டும் சேர்க்கப்பட்ட விடயங்களில பொதுவான விடயங்களை ஒன்றிணைத்து மூன்றாவது நிலையில பொது அட்டவணையைத் தயாரிக்கவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதாரணமாக :**

முதலாம் நிலையில் 25 அட்டைகள்
இரண்டாம் நிலையில் 05 அட்டைகள்
மூன்றாம் நிலையில் ஒரு பொது அட்டவணை

## 02. <u>பொதுவாக எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள்:</u>

1. குடும்ப வன்முறை தொடர்பாக (ஆணாதிக்கக்கருத்தியல்), குடிபோதை ஆகியவற்றால் வரும் வன்முறைகள்)

2. வெளியிடங்களில் (வயல், மற்றும் மில்களில் வேலை செய்யும் போது எதிர்நோக்கும் வன்முறை)

3. அலுவலகங்களில் (அரசாங்க. தனியார்)

4. யுத்த நிலைமைகளில் (காவலரண்கள், படை முன்னேறிச் செல்லும்போது)

5. இவற்றுக்கான தீர்வுகள் ஆலோசனைகள்

## 03. <u>ஆண், பெண் பற்றிய மனப்பாங்குகளைப் பதிவு செய்தல்:</u>

1. இரண்டு குழுக்களாகப் பிரித்தல் நல்ல கையெழுத்துடைய ஒருவரை எழுதுவதற்குத் தெரிவு செய்தல், ஒவ்வொரு குழுவினருக்கும் இரண்டு பெரிய கடதாசிகளைக் கொடுக்க வேண்டும்.

அக்கடதாசிகளில் படிகளைக் கீறி - ஆண், பெண் பற்றிய எண்ணக் கருக்களைப் பதிவு செய்ய வேண்டும்.

உதாரணம்:




ஆண் பெண்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இந்தப்படிமுறையை அடிப்படையாக வைத்துக் கொண்டு பெண்களுக்கெதிரான வன்முறைக் கருத்தியலை விளக்கமுயலல்.

1. ஆணின் வலிமை, வீரம் போன்றன ஆணின் வன் முறையாகவும், பெண்ணின் மென்மை, தியாகம் என்பன வன்முறைக்கு உள்ளாகுபவராகவும் ஒரு எண்ணத்தைத் தோற்றுவித்துள்ளன.

2. பெண்ணுக்கு அழகு முக்கியம் என்பது அவள் அனுபவிப்பதற்கு உரியவள என்ற கருத்து நிலையைத் தோற்றுவித்திருக்கின்றது.

3. பெண் பயப்பட வேண்டியவள் என்ற கருத்து நிலையும் ஆண் பயப்படுத்த உரியவன் என்ற கருத்துநிலையும் பெண்ணை இன்னும் பலவீனமானவளாக்குபவை.

4. பெண் ஆணில் தங்கிவாழ்பவள் ஆணின் சொத்து என்ற நிலையானது ஆணில் கோபமுள்ள வெறுப்புள்ள ஒருவர் பெண்ணைப் பாலியல் பலாத்காரம் செய்வதன்மூலம் அச் சமூகத்தை மானபங்கம் செய்யலாம். என்ற கருத்து நிலை தோற்றுவித்துள்ளது. (இது யுத்தகால வன்முறைகளின் அடிநாதமாகும்)

இந்த கருத்தியலைப் பேணி வளர்க்கின்ற தாபனங்கள்

1. குடும்பம்
2. பாடசாலை
3. கோயில்/தேவாலயம்/பள்ளிவாசல்/விகாரை
4. சமூகம்
5. கலைநிகழ்ச்சிகள், நாடகங்கள், நடனங்கள்.
6. புராண இதிகாசக் கதைகள், நாட்டார் கதைகள், கூத்துகள்
7. தொடர்பு சாதனங்கள், சினிமா, வானொலி. பத்திரிகை
8. சமூக நிறுவனங்கள் (மதம்/சஞ்சிகைகள்/இனம்சார்ந்த கடிதங்கள்)

## வன்முறை என்பது யாது?

## பெண்களுக்கெதிரான வன்முறையை எவ்வாறு விளங்கிக் கொள்வது?

✍ வன்முறை என்பது உடல் ரீதியாகவோ உளரீதியாகவே ஒருவரைப் பாதிக்கும்படி நடந்துகொள்ளல் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெண்களுக்கெதிரான வன்முறை என்பது பெண் என்ற காரணத்துக்காகப் பாலியல் ரீதியான சொற்பிரயோகம், சைகைகள், நடத்தைகள் மூலம் பெண்களை இம்சைப் படுத்துதல் எனலாம்.

## வன்முறை நடைபெறும் சந்தர்ப்பங்கள்:

### 01. பொதுவான சந்தர்ப்பங்கள்:

1. வீட்டில் (கணவன், தந்தை, சகோதரன், மாமா)
2. போக்கு வரத்தில் (பஸ், புகையிரத நெரிசல், போன்றவற்றைப் பயன்படுத்தி இம்சைப் படுத்தல்)
3. வயல், தோட்டவேலைகளில், பண்ணையாள், முதலாளி பயன்படுத்த முயலல்.
4. தொழிற்சாலைகளில், முதலாளி மற்றும் வேலைகொள்வோர்
5. அலுவலகங்களில் (வேலை கொள்வோர்)
6. வெளிநாட்டுப் பணிப் பெண்கள் (வேலை கொள்வோர்)

### 02. விசேட சந்தர்ப்பங்கள்

1. சாதிக் கலவரங்கள்
2. இனக் கலவரங்கள்
3. மதக் கலவரங்கள்
4. உள்நாட்டுப் போர்கள், விடுதலைப் போராட்டங்கள்
5. பயங்கரவாத நடவடிக்கைகள், படையெடுப்புகள்

## பெண்களுக்கெதிரான வன்முறைகளை இனங்காணல்

நேரம்: 3 மணி

தேவையான பொருட்கள் : நிறப் பேனைகள், பெரிய கடதாசிகள்

குழுவில் உள்ளவர்களை 1, 2, 3, 4 எனப் பெயரிட்டு 4 குழுக்களை அமைக்கவும் பெண்களுக்கு ஏற்படுத்தப்படும் உடல் ரீதியான வன்முறைகள், உளரீதியான வன்முறைகள் ஆகியவற்றை எழுதி திருவிலைச் சீட்டின் மூலம் தலைப்புகளைத் தெரிவு செய்யவும். 2 குழுக்களுக்கு ஒரு தலைப்புகிடைக்கும் தலைப்புகள் தெரிவு செய்யப்பட்டபின் ஒவ்வொரு தலைப்புப் பற்றியும் ஒவ்வொரு குழுவினரும் அந்தந்தக் குழுவுக்குரிய தாள்களில் நிறப்பேனையால் எழுத வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ-ம்) குழு - 1 உடல் ரீதியான வன்முறை

| | | |
|---|---|---|
| (பிறவுண்) பெண் கருச் சிதைவு | (மஞ்சள்) வீட்டைவிட்டு துரத்தல் | (பச்சை) பெண் குழந்தை களைக் கொல்லல் |
| (ஓரேஞ்) விபச்சாரத் திற்கு உட்படுத் துதல் | (சிவப்பு) பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்துதல் | (வெண் பச்சை) அடித்தல் |
| (நீலம்) தாயின் விருப்பமின்றி கட்டாயக் கருச்சிதைவு | (கறுப்பு) உதைத்தல் | (சாம்பல்) பெண்களின் பிறப்புறுப்பைச் சிதைத்தல் |

நிறங்களில் விருப்பமானவற்றைத் தெரிவு செய்யலாம். விருப்பமானால் இவற்றை வரைந்தும் காட்டலாம். பத்திரிகைகளில் வந்த பெண்களுக்கெதிரான வன்முறைகள் பற்றிய தகவல்கள் வெட்டி ஒட்டிவைத்திருந்தால் பங்குபற்று வோருக்கு விளக்கமளிக்க உதவியாய் இருக்கும்.

குழு - 2

உள ரீதியான வன்முறை (Psychological Violence)

| | |
|---|---|
| ஏசுதல் | எந்த நேரமும் பெண் எனக் குத்திக் காட்டல் |
| பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்ணை இழிவாக நோக்குதல் | |
| | சுமை எனக் கூறல் |
| பழிச் சொல் | பட்டங்கட்டுதல் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை விளக்குதலும் பங்குபற்றுபவர் ஒவ்வொருவரும் பெற்ற அனுபவங்களையும் உரையாடச் சொல்லுதல் மிக அவசியமாகும். தத்தம் பிரதேசங்களில் பெற்ற அனுபவங்களையும் கூறலாம், அத்துடன் அவர்களின் மனப்பாங்குகளையும் அறிய முடியும். தங்குமிடப் பயிற்சிப் பட்டறையாயின் Violated Images by Women போன்ற Video Cassettes களை எடுத்துக்காட்டலாம். 47 நாட்கள் போன்ற திரைப்படங்களும் உதவக்கூடியன.

## பெண்களுக்கெதிரான வன்முறைகளால் ஏற்படும் விளைவுகள்
## *(Consequences of Violence against Women)*

நேரம்: 4 மணித்தியாலம்

செயற்பாடு - குழுக் கலந்துரையாடல் 2 அல்லது 3 குழு

**பாதிப்புக் காரணிகள்**

சாராயம்
வடிசாராயம்
கஞ்சா
மற்றும் போதை வஸ்து

மது — ஆண்கள், கணவன், சகோதரன், தந்தை

ஆணாதிக்கம் — கணவன், சகோதரன், தந்தை, தந்தை வழி

சீதனம் — சமூக நடைமுறையில் உள் வாங்கிய பெண்கள்

யுத்தம் — ஆண்கள்

**பாதிப்புக்குள்ளாகின்றவை**

1. பொருளாதாரம்
2. குழந்தைகளின் கல்வி
3. மனைவியின் இழப்பு அங்கவீனம்
4. மனநோய்
5. சமூகப் பொருளாதாரம்
6. சமூக உறவுகள்
7. குடும்ப வளர்ச்சி

இவற்றை உரையாடல் மூலம் விளங்கவைக்கலாம் அல்லது இவற்றை நாடகமாக்கிக் காட்ட முடியும். குடும்ப வன்முறையில் மதுபானம் முக்கிய காரணியாக இருத்தலை அவதானிக்கலாம்.

1. குடும்பப் பொருளாதாரம் இழக்கப்படல்
2. மனநோய் ஏற்படல்
3. துஷ்பிரயோகம் போன்றவற்றை நாடகமாக்கும்படி கூறி அவற்றின் விளக்கத்தையும் விமர்சனத்தையும் பங்குபற்றுனர் ஊடாகப் பெறல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகமாக்கி அளித்தல் : 1 மணித்தியாலம்

**இடம்:** நாடகத்திற்குத் தேவையான, பொருத்தமான தரையும் உபகரணமும் இங்கு அவரவர் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல் அவசியமாகும். அல்லது பங்கு பற்றுனர்களைக் குழுக்களாக்கி விவாதத்தலைப்பு ஒன்றினைக் கொடுத்து விவாதம் புரிய வைத்தல் நன்று.

**உ - ம் :**

- பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்புக்குக காரணம் பெண்களே
- பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்புக்குக் காரணம் ஆண்களே
- பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்புக்குக் காரணம் சமூக சிந்தனைகளே.

விவாத இறுதியில் வளப்பகிர்வாளர் அதற்குரிய விளக்கமளிப்பதுடன் விவாதத் திறமை/திறமையீனங்கள் பற்றியும் கூறி வழி நடத்தலாம்.

## பெண்களுக்கெதிரான வன்முறைகளை எவ்வாறு குறைப்பது.

நேரம் : 3 மணித்தியாலம்

தேவையான பொருட்கள் : நிறப்பேனாக்கள், பிறிஸ்ரல்போட், வெற்றுத் தாள்கள்.

தலைப்பு : வன்முறைக்காரணிகளை இனங்கண்டு அவற்றை ஒழுங்கு முயற்சியில் ஈடுபடல்.

உ - ம் :

**ஆணாதிக்கம் :** சமூக சிந்தனை மாற்றம் ஏற்பட வேண்டும் ஏற்படக்கூடிய ஸ்தாபனங்கள்

1. பெண்கள் நிறுவனங்கள்
2. சமூக முன்னேற்றச் சங்கம்
3. பால் சமத்துவக் கல்வி முறையை வழங்கல்
4. தொடர்புச் சாதனங்களில் விளக்கம்
5. பெண்கள் விழிப்புறுதல்
6. சட்ட மூலங்கள் இயற்றுதல்
7. கூட்டச் செயற்பாட்டைக் கண்காணித்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதுபாவனை** - 1. வடிசாராய ஒழிப்பு முயற்சி
2. சமூக நிறுவனங்களின் முயற்சி
3. முறைசாராக் கல்வி
4. தொடர்பு சாதனங்களின் பிரசாரம்
5. மற்றும் இது தொடர்பான கலை நிகழ்ச்சிகள்

**யுத்தம்** - 1. யுத்த ஒழிப்புக்கான முயற்சி
2. சமாதானம்
3. நம்பிக்கை
4. இறுக்கமான சட்டம்

**பங்குபற்றுனர்களைக் குழுக்களாகப் பிரித்தல்**

1. மது ஒழிப்புப் பிரசாரம். விளம்பரம் தயாரித்தல்
2. மது ஒழிப்பு நடவடிக்கைகளைத் திட்டமிடல்
3. பத்திரிகை ஒன்றுக்கு மது பாவனை விளைவுகள் பற்றி அறிக்கை எழுதுதல்.
4. கல்வித்திட்டத்தில் சேர்க்க வேண்டிய விடயங்கள்
5. யுத்த வன்முறையை ஒழித்தல் பற்றிய விளம்பரம் / கட்டுரை போன்றவற்றைத் தயாரிக்கும்படி கூறுவதன் மூலம் பங்குபற்றுனரை இதுபற்றிய செயற்றிறனில் ஈடுபடவைக்க முடியும்.

**விளம்பரம் தயாரித்தல்:**

மது ஒழிப்பு நடவடிக்கைகளைத் திட்டமிடல் போன்றவற்றுக்கு பிறிசில் போட்களையும். நிறப்பேனாக்களையும் பயன்படுத்தலாம்.

யுத்தவன்முறை பற்றிய பத்திரிகைக்குறிப்புகளை வைத்து சமாதானம் பற்றிய விளம்பரங்களைத் தயாரிப்பது நல்லது.

## மதிப்பீட்டு வினாக்கள்

1. பயிற்சியில் கலந்து கொள்ளுமுன் அவர்களது மன. உடல்நிலை பற்றிய உணர்வும் பயிற்சியின் பின் பெற்றமாற்றம்.
2. புதிய அறிவைப் பெற்றிருக்கிறார்களா?
3. அவர்களது திறமை எவ்வகையில் வெளிப்பட்டது ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பெண்களுக்கெதிரான வன்முறைகள் பற்றிய கருத்து நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதா ?

5. இது ஒரு பிரச்சினை என இனங்காண முடிகிறாதா ?

6. இது பற்றி இன்னும் விளக்கமும், பிரச்சாரமும் எதிர்பார்க்கப்படுகின்றதா?

7. இது தீர்க்கப்படுவதில் சமூக நிறுவனங்களின் பங்கு என்ன ?

8. இது தீர்க்கப்படுவதில் தனி மனிதனின் பங்கு என்ன ?

## 5.2 பெண்களும் சட்டமும் (Women & Law)

**அறிமுகம்:**

பெண்களும் சட்டமும் என்னும் தலைப்பினை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது இது மிகவும் ஒரு பரந்துபட்ட விடயமாகவே நோக்கப்பட வேண்டியதாகும். எனினும் நாம் இங்கு பெண்கள் சம்பந்தமான சட்டப்பரப்புகளில் முக்கியமாக, சமகாலத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் அடிப்படையில் முக்கியமான சட்ட விடயங்களை எடுத்து நோக்குவோம்.

இவற்றில் முக்கியமாகப் பெண்களின் திருமண விடயம் **(Marriage)** சம்பந்தமாகவும், திருமணம் ஒன்று எவ்வாறு குலைக்கப்படுகின்றது என்பது பற்றியும் அதாவது விவாகரத்து பற்றியும், **(Divorce)** அவ்வாறு திருமணம் குலைக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களது ஜீவனாம்சம் எவ்வாறு பெறப்படுகின்றது அதாவது பராமரிப்பு பற்றியும் **(Maintenance)** அத்துடன் அச்சந்தர்ப்பத்தில் (விவாகத்தின்போது) அவர்களது பிள்ளைகளை யார் பொறுப்பில் விடுவது அதாவது பிள்ளையின் கட்டுக்காவல் **(Custody)** பற்றியும், அத்துடன் இவர்களுக்கிடையிலான சொத்துக்கள் எவ்வாறு பிரிக்கப்படுகிறது எனவும் **(Inheritance)** பார்க்கலாம்.

மேற்படி இவ்விடயங்கள் பல்வேறு சட்டங்களின் அடிப்படையில் நோக்கப்படுவதாகும். அதாவது எமது நாடு பல்லின, பல, மத, மொழி பேசும், பல கலாச்சாரங்களைச் சேர்ந்த மக்களைக் கொண்ட நாடு என்பதால் இவர்கள் எல்லோருக்கும் ஒரேவகையான சட்டமாக அல்லாமல் அவரவர் மத, கலாச்சார அடிப்படைகளில் சட்டங்களும் வேறுபடுத்தப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படையில் நமது நாட்டில் காணப்படும் சட்டங்களாகப் பொதுச் சட்டமும், அத்துடன் கண்டியச் சட்டம், முஸ்லிம் சட்டம், தேசவழமைச் சட்டம் போன்ற ஆள்சார் சட்டங்களும் காணப்படுகின்றது.

இவற்றின் அடிப்படையில் இச் சட்டங்கள் யார் யாருக்கு ஏற்புடையவை என்றும் அவை எவ்வாறு மேற்கூறப்பட்ட விடயங்களான திருமணம், விவாகரத்து, பராமரிப்பு கட்டுக்காவல், சொத்துரிமை என்பன தொடர்பில் ஆளப்படுகின்றன என்றும் பார்ப்போம்.

அத்துடன் தற்காலத்தில் எமது மக்களைப் பெரிதும் பாதித்துவரும் சட்டங்களான பயங்கரவாதத் தடைச்சட்டம், அவசரகால ஒழுங்கு விதி போன்றனவும் பெண்களிடம் ஏற்படுத்தியுள்ள தாக்கம் பற்றியும் மேலோட்டமாக நோக்கலாம்.

இவற்றைவிடத் திருமணங்கள் தொடர்பில் சில வழக்காற்று நடைமுறைகள் மற்றும் சமயச் சடங்குகளையும் குறிப்பிடலாம். அத்துடன் மேற்கூறிய ஆள்சார் சட்டங்கள் யாவும் இந்த வழக்காற்றுகள், அடிப்படையில் உருவாக்கப்பட்டிருப்பதையும் நாம் காணக் கூடியதாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலப்புத் திருமணங்கள்:

திறத்தவர்களுக்கிடையிலான கலப்புத் திருமணங்கள் யாவும் பொதுச் சட்டப்படியே செய்யப்படுகின்றன.

(உ-ம்)

ஒரு முஸ்லிம் பெண்ணும், இந்து ஆணும் திருமணம் செய்வதாயின் பொதுச் சட்டத்தின் கீழ்தான் செய்ய முடியுமே அன்றி முஸ்லிம் சட்டத்தின் கீழ் அல்ல.

## திருமணம் - Marriage

திருமண ஒப்பந்தம் ஒன்று எவ்வாறு வலிதுடையதாகின்றது என்பது அத்திறத்தவர்களை ஆளும் சட்டத்தின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது. பொதுவாகத் திருணம் ஒன்று பதிவு செய்வதன் மூலமும், வழக்காற்று நடைமுறைகளைப் பின்பற்றிச் செய்யப்படும் சமயச் சடங்குகள் மூலமும் வலிதுடையதாகின்றது.

**வலிதான திருமணம் ஒன்றின் தேவைப்பாடுகள்**

- பொதுச் சட்டம் RDL — பதிவு/சமயச்சடங்கு
- கண்டியச் சட்டம் — பதிவு கட்டாயம்
- முஸ்லிம் சட்டம் — சடங்கு கட்டாயம்

இங்கு பார்க்கும் போது ஒவ்வொரு சட்டத்திலும் வெவ்வேறு தேவைப்பாடுகள் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். அதாவது பொதுச் சட்டத்தின்படி பதிவு செய்தல் மூலம் அல்லது சமயச் சடங்கு மூலம் இரண்டில் ஒன்றின் மூலம் திருமணம் ஒன்று வலிதாக்கப்படலாம். ஆனால் இது கண்டியச் சட்டத்தில் சற்று வேறுபடுகின்றது அதாவது இங்கு பதிவு செய்தல் என்பது கட்டாயமாகும். இதன்படி பார்த்தால் சமயச் சடங்கு இருந்ததோ, இல்லையோ பதிவு செய்யாத கண்டியத் திருமணம் ஒன்று வலிதற்றதாகின்றது.

முஸ்லிம் சட்டத்தினைப் பார்க்கும் போது சமயச்சடங்கு இங்கு கட்டாயமாக காணப்படுகின்றது. முஸ்லிம் திருமணம் ஒன்று வலிதானதாக இருக்க வேண்டுமாயின் அங்கு பதிவு செய்யப்படுகிறதோ, இல்லையோ சமயச் சடங்கு கட்டாயத் தேவைப்பாடாகும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இனி ஒவ்வொரு சட்டத்திலும் திருமணம் ஒன்று எவ்வாறு நடைபெறுகின்றது எனப்பார்ப்போம்.

## பொதுச் சட்டம் - General Law:

பொதுச் சட்டத்தின் கீழ் வலிதான திருமணம் ஒன்று நடைபெற வேண்டுமாயின் பதிவு செய்தல் மூலம் அல்லது வழக்காற்று முறைகள் மூலம் (சமயச் சடங்கு மூலம்) இடம் பெறலாம்.

## பதிவு செய்தல் - Registration of Marriages:

திருமணம் ஒன்று திருமணப் பதிவாளரிடமோ அல்லது கிறிஸ்தவப் பாதிரியாரிடமோ பதியப்படலாம். கிறிஸ்தவர்கள் பாதிரியாரிடமும், ஏனையவர்கள் திருணமப்பதிவாளரிடமும் தங்களது திருமணத்தினைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.

### பதிவு செய்தலுக்கான நடைமுறை :

முதலில் திருமணம் செய்வதற்கான "முதல் அறிவிப்புக்" கொடுக்கப்படல் வேண்டும். அதாவது திருமணத்திற்கு 15 நாட்களுக்கு முன் இந்த அறிவிப்பு அத்திறத்தவர்கள் (திருமணம் செய்ய உள்ளவர்கள்) வாழும் இடத்திலுள்ள மாவட்ட\பிரதேச பதிவாளரிடம் செய்யப்பட வேண்டும்.

அவ்வறிவித்தல் முறையான படிவத்தில் செய்யப்பட்டிருக்க வேண்டும். அதில் பின்வரும் விபரங்கள் அடங்கியிருக்க வேண்டும்.

1. பெயர்
2. வயது
3. இனம்
4. தொழில் போன்றன.

இவ்வாறு கொடுக்கப்படும் அறிவித்தல் திருமண அறிவிப்புப் புத்தகத்தில் பதியப்படல் வேண்டும். பின்னர் அவ்வறிவித்தல் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படல் வேண்டும். ஏனெனில் திறத்தவர்கள் தொடர்பில் ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் பொதுமக்கள் அதனைத் தெரிவிக்க உதவியாக இருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின்னர் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கப்படாத விடத்து திருமணப் பதிவாளர் திருமணத்தைப் பதிவதற்கான சான்றிதழை (Certificate) வழங்குவார். பின்னர் திருமணம், பதிவாளர் அலுவலகத்திலோ அல்லது வேறு அதிகாரம் அளிக்கப்பட்ட இடத்திலோ அல்லது கிறிஸ்தவப் பாதிரியாரால் தேவாலயத்திலோ நிறைவேற்றப்படும்.

இது பொது சட்டத்தில் பதிவுத் திருமணம் ஒன்று இடம் பெறும் நடைமுறையாகும்.

இனி, பொதுச் சட்டத்தில் வழக்காற்றுத் திருமணங்கள் எவ்வாறு நடைபெறுகின்றன என நோக்குவோம்.

## பொதுச் சட்டத்தின் கீழ் வழக்காற்று திருமணம்

### 01. போறுவ சடங்கு - [Poruwa Ceremony]:

இது இலங்கையிலுள்ள சிங்கள பௌத்தர்களால் (கண்டியர் தவிர்ந்த) மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது உறவினர்கள், நண்பர்கள், முன்னிலையில் ஆணினதும், பெண்ணினதும் (மணமகள், மணமகன்) சின்னி விரல்களை ஒரு சிறு நூலால் கட்டிவிட்டு அதன் மேல் ஒரு பாத்திரத்திலிருந்து நீரை பௌத்த மதகுரு ஒருவர் ஊற்றும் போது சுற்றத்தினரால் 'ஜெயமங்களகீதம்' இசைக்கப்படுவதாகும். இவ்வாறு செய்து திருமணம் செய்யும் போது இதுவும் ஒரு வலிதான திருமணமாகக் கொள்ளப்படும்.

### 02. தாலிகட்டுதலும் கூறைச்சடங்கும் - [Thali & Koorai Ceremony]

இது முக்கியமாக யாழ்ப்பாணத் தமிழர்களால் மேற்கொள்ளப்படுவதாகும். இவ்வாறு செய்தாலும் வலிதான திருமணமாகக் கருதப்படும். இங்கு இந்துமத குரு ஒருவர் பிரசன்னமாய் இருக்க வேண்டியது அவசியமாகும். ஆனால் கிழக்கு மாகாண இந்துக்கள் மத்தியில் தாலி கட்டுதல் அவசியமில்லையாயினும் 'கலம் சடங்கு' முக்கியமானதாகும். அதாவது ஏழு மரக்கறி கலந்த கறி சமைக்கப்பட்டு ஒரு வெண்கலப் பாத்திரத்தில் இட்டு மணமகன் மணமகள் ஒருவருக்கொருவர் ஊட்டுவதாகும். (கலத்தில் போடுதல்) இவ்வாறு செய்யப்பட்டு திருமணம் நடக்கும் போதும் ஒரு வலிதான திருணம் நடந்ததாகக் கொள்ளப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை விட அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல், கைப்பிடித்துக் கொடுத்தல் போன்ற சடங்கு முறைகளும் இந்துக்களிடையே காணப்படும் வழக்காற்று நடைமுறைகளாகும்.

அத்துடன் கிறிஸ்தவ தேவாலயத்தில் கிறிஸ்தவ பாதிரியார் ஒருவரால் நிறைவேற்றிவைக்கப்படும் திருமணமும் வலிதான திருமணமாகக் கொள்ளப்படுகின்றது.

## கண்டியச்சட்டத்தின் கீழ் திருமணம்
## ( Marriage under the Kandian Law )

கண்டியச் சட்டத்தின் கீழ் திருமணம் எனும் போது இரண்டு கண்டியச் சிங்களவர்களிடையே நடைபெறும் திருமணமாகும். அதாவது கண்டியமாகாணத்தில் (மத்திய மாகாணம்) வாழும் சிங்களவர்களிடையே நடைபெறும் திருமணமாகும்.

இச் சட்டத்தின் கீழும் பதிவு செய்வதற்கு அறிவித்தல் கொடுப்பது அவசியமாகும். அதாவது திருமணப்பதிவு செய்வதற்கு முன் பதிவு செய்வதற்கான அறிவித்தலை முதலில் கொடுக்க வேண்டும். அத்துடன் திருமணம் செய்யும் திறத்தவர்களில் ஒருவர் குறைந்தது நான்கு நாட்களாவது கண்டிய மாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டியது கட்டாயமாகும். அறிவித்தல் கொடுக்கும் போது திறத்தவர்கள் பதிவாளர் முன், இரண்டு சாட்சிகளுடன் தோன்றி அறிவித்தல் கொடுக்க வேண்டும். அத்துடன் கொடுத்த விபரங்கள் சரியானதெனவும், உண்மையானது எனவும் பிரகடனப்படுத்த வேண்டும்.

கண்டியச் சட்டத்தின் கீழ் திருமண அறிவித்தலில் பின்வரும் விடயங்கள் உள்ளடங்கும். திறத்தவர்களின் பெயர், வயது, தொழில், வசிப்பிடம், அத்துடன் திருமணம் பின்னவா அல்லது தீகவா (Binna / Diga) எனவும் குறிப்பிட வேண்டும் இது பொதுச் சட்டத்திலிருந்து ஒரு சிறப்பான அம்சமாகும். இவ்வாறு அறிவித்தல் கொடுத்த பின் பதிவாளர் அவ்வறிவித்தலைக் குறைந்தது 12 நாட்களுக்காவது அவரது காரியாலயத்தில் காட்சிக்கு வைத்தல் வேண்டும் அத்துடன் அறிவித்தல் கொடுத்த திறத்தவருக்கு அவ் அறிவித்தலின் அத்தாட்சிப்படுத்திய பிரதி ஒன்றினைக் கொடுக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Differences between Diga Binna Marriages

## *பின்ன, தீக திருமண வேறுபாடுகள்*

| பின்ன Binna | தீக Diga |
|---|---|
| கணவன் மனைவியின் வீட்டில் வசிப்பார். அதாவது மனைவியின் வீட்டுக்குக் கணவர் சென்று வாழ்வார் | மனைவி கணவனின் வீட்டில் வசிப்பார். |
| பிள்ளைகள் மனைவியின் குடும்பப் பெயரைப் பாவிப்பார் | இங்கு கணவனின் குடும்பப் பெயரைப் பாவிப்பார் |
| கணவன் மனைவியாலோ அல்லது மனைவியின் குடும்பத்தாராலோ விவாகரத்துச் செய்யப்படலாம். | இங்கு மனைவி அவரின் குடும்பத்தில் அவருக்குள்ள சொத்துரிமையை இழப்பார். |
| இப்போது இது நடைமுறையில் குறைவு | பெண் திருமணத்தின் போது சீதனத்திற்கு உரித்துடையவர் |

## முஸ்லிம் சட்டத்தின் கீழ் திருமணம் : Marriage under the Muslim Law

இச் சட்டத்தின் கீழ் திருமணம் ஒன்றுக்கான தேவைப்பாடுகளைப் பார்ப்போம்.

01. ஆண்,பெண் இருவரும் முஸ்லீமாக இருக்க வேண்டும்.

02. அத்துடன் முஸ்லீம் ஆண் முஸ்லீம் அல்லாத கிறிஸ்தவ பெண்ணை முஸ்லீம் சட்டத்தின் கீழ் திருமணம் செய்யலாம்.

03. ஆனால் ஒரு முஸ்லீம் ஆண், இந்து அல்லது பௌத்த மதத்தைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்ய வேண்டுமாயின் இஸ்லாம் மதத்திற்கு மாற்றிய பின்னரே திருமணம் செய்யலாம்.

04. முஸ்லீம் பெண் முஸ்லீம் அல்லாத ஒருவரை இச்சட்டத்தின் கீழ் திருமணம் செய்ய முடியாது அவ்வாறு செய்வதாயின் பொதுச்சட்டத்தின் கீழ்த்தான் செய்ய வேண்டும்.

05. அத்துடன் முஸ்லீம்களுக்கு பொதுச்சட்டத்தின் கீழ் திருமணம் செய்வதற்கான விருப்புரிமை கிடையாது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அதாவது பொதுச் சட்டத்தின் கீழோ அல்லது கண்டியச் சட்டத்தின் கீழோ திருமணம் செய்ய முடியாது.

முஸ்லீம் திருமணமானது ஓர் ஒப்பந்தமாகும். அதாவது அங்கு ஒரு முன்மொழிவும், ஏற்பும் இடம் பெறும். அதாவது முஸ்லீம் பெண் ஒருவரிடம் சென்று ஒரு முஸ்லீம் ஆண் திருமணம் செய்வதற்கான தனது விருப்பத்தை கூறுவார். அதற்கு அவர் அதனை ஏற்று சம்மதம் தெரிவிப்பார். இது இரண்டு சாட்சிகளின் முன்னிலையில் இடம் பெறும். அதன் பின் முஸ்லீம் சட்ட சம்பிரதாயங்களின் படி திருமணம் இடம் பெறும்.

## நிக்கா சடங்கு (Nikah Ceremony)

வலிதான முஸ்லீம் திருமணம் ஒன்றுக்கு இச் சடங்கு மிக முக்கியமானதாகும். திருமணப் பதிவு செய்யப்பட்டிருப்பினும் ''நிக்கா'' சடங்கு இடம் பெறும் போது மட்டுமே வலிதான திருமணம் ஒன்று இடம் பெற்றதாக முஸ்லீம் சட்டம் ஏற்றுக் கொள்ளும்.

நிக்கா சடங்கு என்பது இஸ்லாமிய மதத்தலைவர் ஒருவர் முன்னிலையில் திருமணச்சடங்கு நடைபெறும். அப்போது புனித குறான் ஓதப்பட்டு உறவினர். சுற்றத்தார் முன்னிலையில் சடங்கு இடம் பெறுவதாகும்.

முஸ்லீம் திருமணம் ஒன்று முஸ்லீம் திருமண, விவாகரத்துச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும். பதிவானது பதிவாளருக்குச் சில தகவல்களைக் கொடுப்பதன் மூலம் நடத்தப்படும். அத்தகவல்களை மணமகன், மணமகளின் வழி (Wali) அதாவது மணமகளின் பாதுகாவலர் (தந்தை / சகோதரன்) மற்றும் நிக்கா சடங்கை நடாத்துபவர் போன்றோர் சேர்ந்து கொடுக்க வேண்டும். அத்தகவல்களில் முக்கியமாகத் திருமணம் நடக்கவிருக்கும் திகதி, நேரம், இடம், மற்றும் நிக்கா சடங்கு எப்போது நடைபெற்றது அல்லது நடைபெறும் என்பன அடங்கியிருக்க வேண்டும்.

முஸ்லீம் திருமணத்தின் போது விவாகப் புத்தகத்தில் பின்வருவோர் ஒப்பமிடுவர்.

01. மணமகன்
02. இரண்டு சாட்சிகள்
03. நிக்கா சடங்கு நடத்துபவர்
04. விவாகப் பதிவாளர்
05. மணமகளின் வழி (தந்தை / சகோதரன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லீம் திருமணம் ஒன்று பதிவு செய்யபடாமல் விடல் ஒரு தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும். என்று முஸ்லீம் சட்டம் கூறுகின்றது. ஆனால் முஸ்லீம் திருமணம் ஒன்று வலிதானதாவதற்குத் திருமணப்பதிவு அத்தியாவசியமானதல்ல, சடங்கு மட்டும் இருந்தாலே போதுமானது.

## திருமணத்திற்கான வயதெல்லை :(Age Limit)

01. பொதுச் சட்டத்தின் ஆண், பெண் இருபாலாருக்கும் வயதெல்லை 21 வயது. அதாவது இருபாலாருக்கும் 21 வயதைப் பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும்.

02. முஸ்லீம் சட்டத்தின் கீழ் வயதெல்லை கிடையாது ஆனால் 12 வயதுக்குக் குறைந்த பெண்பிள்ளையாயின் காதியின் (*Quazi*) அனுமதி பெறப்பட வேண்டும்.

எல்லாச் சட்டங்களின் கீழும் அதாவது (பொதுச்சட்டம், கண்டிச்சட்டம், முஸ்லீம் சட்டம்) திருமணம் செய்யும் போது சில உறவு முறைகளுக்குள் திருமணம் செய்ய முடியாது. அதாவது திருமணத்திற்கு சில உறவு முறைகள் தடை செய்யப்பட்டுள்ளன. அவற்றுள்.

01. இரத்த உறவு முறையில் உள்ளவர்கள் திருமணம் செய்ய முடியாது.

02. சகோதரன் / சகோதரி அல்லது மாற்றான் சகோதரன் / சகோதரி

03. முன்னைய வாழ்க்கைத் துணைவியின் பிள்ளை (முன்னைய திருமணத்தின் மூலம்)

04. பெற்றோரின் பெற்றோர் + பெற்றோரின் பிள்ளைகள் அத்துடன் முஸ்லீம் சட்டத்தில் மேலும் சில உறவு முறைகள் தடைசெய்யப்பட்டுள்ளன அவை.

05. மனைவி உயிர் வாழும்போது மனைவியின் சகோதரி

06. விவாகரத்துச் செய்யப்பட்ட பெற்றோரின் பேரப்பிள்ளையின் வாழ்க்கைத் துணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலதார மணம் செய்தல் (பல திருமணம் புரிதல்) : ( Bigamy )

பொதுச் சட்டம், கண்டியச் சட்டம் போன்றவற்றில் விவாகரத்துப் பெறாமல் இரண்டாவது திருமணம் செய்ய முடியாது. அவ்வாறு திருமணம் செய்வது இருதாரமணம் புரிதல் என்பதனடிப்படையில் ஒரு குற்றவியல் குற்றமாகும். இவ்வாறானவர்களுக்கு அக் குற்றம் நிரூபிக்கப்பட்டால் தண்டனை வழங்கப்படும்.

ஆனால் முஸ்லீம் சட்டத்தின் கீழ் முஸ்லீம் ஒருவர் விவாகரத்துப் பெறாமல் ஒரே நேரத்தில் நான்கு பெண்களைத் திருமணம் செய்யலாம். அதாவது ஒரே நேரத்தில் நான்கு பெண்களுடன் வாழ்க்கை நடத்தலாம். அது குற்றமானது. இங்கு 2ம், 3ம், 4ம் திருமணம் செய்யும் போது முதலாம் நபரின் சம்மதம் பெறப்பட்டிருக்க வேண்டும்.

அத்துடன் 2ம், 3ம், 4ம் திருமணம் செய்வது பற்றிய தமது எண்ணத்தை அந்த நபர் வசிக்கும், தனது மனைவி வசிக்கும் பகுதியிலுள்ள காதிக்கு அறிவிக்க வேண்டும்.

முஸ்லீம் சட்டத்தில் மணப் பெண்ணின் முக்கியத்துவம் ஏனைய சட்டங்களிலும் பார்க்க மிகக் குறைவானதாகும். அதாவது இங்கு (ML) மணப் பெண் திருமணப்பதிவுப் புத்தகத்தில் ஒப்பமிடமாட்டார் அத்துடன் மணமகளின் சம்மதத்தை விட அவரின் பாதுகாவலரின் சம்மதமே முக்கியமானதாகும். அதாவது பாதுகாவலரின் சம்மதம் கட்டாயம் இருக்கவேண்டியது இன்றியமையாதது.

ஆனால் பொதுச் சட்டம், கண்டியச் சட்டங்களில் திறத்தவர்களின் சம்மதம் முக்கிய இடம் பெறுகிறது. இச்சட்டத்தின் கீழ் ஆணின் சம்மதம் எவ்வளவு முக்கியமானதோ அதே போன்றே பெண்ணின் சம்மதமும் இன்றியமையாததாகும். இங்கு ஆண் பெண் பாகுபாடு காட்டப்படவில்லை. ஆனால் முஸ்லிம் சட்டத்தில் இந்தப் பாகுபாடு மணமகளை ஒரு பொம்மை போன்ற நிலைக்கு ஆளாக்குவதை நாம் காணக்கூடியதாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பராமரிப்பு - Maintenance

நேரம் : 2 மணி

பயிற்சிப் பொருட்கள் : பேப்பர், போஸ்ரர் பேப்பர், வண்ணப் பேனாக்கள், ஒட்டும் நாடாக்கள், எழுது பலகை.

பராமரிப்பு என்றால் என்ன ?

பராமரிப்பு என்னும் போது, திருமணம் ஒன்று நடந்து கணவன் மனைவியாக வாழும் போது மனைவியைக் கணவன் பராமரிக்க வேண்டியது கட்டாய கடப்பாடாகும். அதாவது மனைவிக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது ஒரு கணவனின் இன்றியமையாத சட்டக் கடப்பாடாகும்.

அதாவது மனைவியினது முக்கிய தேவைகளான உணவு, உடை, ஏனைய தேவைகளான மருந்து, போக்குவரத்து போன்றவைகள் அவருக்கு அளிக்க வேண்டும்.

கணவன் இக்கடமைகளை நிறைவேற்றத் தவறினால் மனைவி நீதிமன்றம் சென்று கணவனுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலம் நிவாரணம் கோரலாம். இதற்கான வழக்கை அருகிலுள்ள நீதவான் நீதிமன்றத்தில். (Magistrate Court) தாக்கல் செய்ய முடியும்.

அப்போது நீதிமன்றம் அவ்வழக்கின் நிகழ்வுகளை ஆராய்ந்து கணவனுக்குப் போதிய வருமானம் இருந்தால் குறிப்பிட்ட ஒரு தொகையினை மாதாந்தம் தனது மனைவிக்கு வழங்கும்படி கட்டளையிடும். அவ்வாறு வழங்கும்படி கட்டளையிடும் போது பின்வரும் இரு விடயங்களை நீதிமன்றம் கவனத்தில் எடுக்கும்.

01. கணவன் போதுமான வருமானம் பெறுபவரா என்பது. இது விடயத்தில் கணவன் ஒரு நிரந்தர வேலையற்றவராக இருந்தாலும் கூட அவர் ஒரு வேலையைத் தேடிக் கொள்ளக் கூடியவராக இருந்தாலே அவர் போதுமான வருமானம் பெறுவார் என்று கருதப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. அத்துடன் மனைவியின் வருமானமும் இது விடயத்தில் கவனத்தில் எடுக்கப்படும். மனைவி சொந்தமாக போதுமான வருமானம் பெறுபவராக இருப்பின் கணவனிடமிருந்து பராமரிப்புப் பெற முடியாது.

பராமரிப்பானது பராமரிப்புக் கோரி விண்ணப்பம் செய்யப்பட்ட அத்தினத்திலிருந்து கொடுக்கப்பட வேண்டும் ஆனால் மனைவி கணவனுடன் சேர்ந்து வாழாத சந்தர்ப்பங்களில் பராமரிப்புக்கோர முடியாது. ஏனெனில் சட்டம் பிரிந்து வாழ்வதை ஒரு போதுமே ஊக்குவிப்பதில்லை அதனாலே பிரிந்து வாழும் சந்தர்ப்பத்தில் பராமரிப்பு வழங்கப்படுவதில்லை.

ஆனால் பிரிவதற்குத் தகுந்தகாரணம் இருப்பின் அதாவது கணவனின் கொடுமைப்படுத்தல், சோரம் என்பன காணப்படும் சந்தர்ப்பங்களில் அவள் பிரிந்து வாழ்ந்தாலும் பராமரிப்புக் கோரி விண்ணப்பம் செய்யலாம். அத்துடன் கணவனும் மனைவியும் ஒத்த சம்மதத்துடன் பிரிந்து வாழும் சந்தர்ப்பங்களில் பராமரிப்புக் கோரி மனைவி நீதி மன்றம் செல்ல முடியாது.

**முஸ்லீம் சட்டத்தின் கீழ் பராமரிப்பு :- Maintenance under the Muslim Law**

இச் சட்டத்தில் பராமரிப்பு மேற்கூறியது போன்று அல்லாமல் வித்தியாசமானது. இங்கு பராமரிப்புக் கோரும் விண்ணப்பம் காதி நீதி மன்றத்திற்கு (**Quazi Court**) செய்யப்படல் வேண்டும். அத்துடன், இங்கு பெண்ணின் பணம், அந்தஸ்து என்பன கவனத்தில் எடுத்துக் கொள்ளப் பட மாட்டாது.

அத்துடன் பொதுச் சட்டத்தைப் போன்று விண்ணப்பம் செய்த காலத்திலிருந்து பராமரிப்பு வழங்கப்பட மாட்டாது. இக் காலத்தில் மனைவி கணவனுடன் சேர்ந்து வாழ்ந்திருப்பின் அக் காலத்திற்குப் பராமரிப்பு வழங்கப்பட மாட்டாது.

அத்துடன் முஸ்லீம் சட்டத்தின் கீழ் ஒரு கணவர் (தந்தை) தனது பிள்ளைகளை நெறிமுறையான அல்லது நெறி முறையற்ற எந்தப் பிள்ளைகளானாலும் அவர்களைப் பராமரிக்க வேண்டும். அதாவது அவர்கள் தமது உரிய வயதை அடையும் வரை அவர்களைத் தந்தை பராமரிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் தனது பெண் பிள்ளைகளைத் திருமணம் செய்யும் வரையும், ஆண் பிள்ளைகளை 15 வயது வரையும் ஒரு முஸ்லீம் தந்தை பராமரிக்க வேண்டும். ஆனால் ஆண் பிள்ளைகள் கல்வி கற்பவர்களாக இருப்பின் அவர்களது கல்வி கற்று முடியும் வரை அவர்களைப் பராமரிக்கவேண்டியது கட்டாயமாகும்.

இவ்வாறு பராமரிப்புச் சட்டத்திற்கு, சட்டம் சற்று வேறுபட்டுக் காணப்படுவதை நாம் அவதானிக்கலாம்.

## விவாகரத்து (Divorce)

**நேரம் :** 03 மணித்தியாலம்

**பயிற்சிப் பொருட்கள் :** பேப்பர், போஸ்ரல் பேப்பர், வண்ணப்பேனாக்கள் ஒட்டும் நாடாக்கள், எழுது பலகை

**முறை :** விரிவுரை மூலம்

**விவாகரத்து என்றால் என்ன?**

விவாகரத்து என்பது சட்டப்படி கணவனும், மனைவியுமாக இணைந்திருந்தவர்கள் ஏதாவது காரணங்களின் அடிப்படையில் இனி மேலும் இருவரும் சேர்ந்து வாழ முடியாத பட்சத்தில் நீதி மன்றம் சென்று விவாகரத்துக் கோருவதாகும். அதாவது கணவன், மனைவி என்ற அந்தஸ்தைக் குலைப்பதாகும். இது நீதிமன்றத்தால் முடிவுறுத்தப்படுகின்றது.

இனி ஒவ்வொரு சட்டத்திலும் விவாகரத்து எவ்வாறு பெறப்பட முடியும் அதற்கான காரணிகள் என்ன என்பதையும் பார்ப்போம்.

<u>**பொதுச் சட்டத்தின் கீழ் விவாகரத்து :** Divorce undr the General Law</u>

பொதுச் சட்டத்தின் கீழ் மூன்று காரணங்களின் அடிப்படையில் விவாகரத்துப் பெறலாம் என்று சட்டம் கூறுகின்றது.

01. வன்ம உறவறுத்தல் (Malicious Desertion)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. சோரம் போதல் (Adultery)

03. திருமணத்தின் போதான குணப்படுத்த முடியாத மலட்டுத்தன்மை. (Impotence)

மேற்கூறிய காரணிகளும் ஏதாவது ஒன்றின் அடிப்படையில் விவாகரத்துக் கோரலாம்.

**வன்ம உறவறுத்தல் :** Malicious Desertion

இங்கு கணவன் அல்லது மனைவி திருமணத்தை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் உறவை அறுத்துக் கொண்டு செல்வதைக் குறிக்கும். அதாவது வேண்டும் என்று வன்மமாக உறவை அறுத்துக் கொண்டு விட்டுச் செல்வதைக் குறிக்கும்.

இந்த வன்ம உறவறுத்தல் இரண்டு வகைப்படும்.

**01. சாதாரண வன்ம உறவறுத்தல் :** Simple malicious Desertion

இங்கு குற்றம் செய்தவர் வீட்டை விட்டு வெளியேறுவார் அதாவது கணவனே. உறவறுக்கக் காரணமாக இருந்த அவரே விட்டுச் செல்வது. (உ - ம்) அடித்துவிட்டு அடித்தவரே வெளியேறுதல்

**02. அமைய வன்ம உறவறுத்தல் :** Constructive Malicious Desertion

இங்கு குற்றமற்றவர் வீட்டை விட்டு வெளியேறுவார். அதாவது குற்றம் புரிந்தவர் குற்றம் புரியாதவரை வீட்டை விட்டு வெளியேற்றுவதைக் குறிக்கும்.

(உ-ம்) அடித்து விட்டு அடி வாங்கியவரை வெளியேற்றுதல்.

ஆனால் இது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வீட்டை விட்டு வெளியேற்றுதல்தான் வன்ம உறவறுத்தலாகாது. ஒரே வீட்டில் கணவன் மனைவி ஒன்றாக வசிப்பினும் ஊண், உறக்கத்தில் அவர்கள் ஒன்றாக -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழவில்லையாயின் அதுவே வன்ம உறவறுத்தலுக்குப் போதுமானதாகும். எமது நாட்டில் இந்த அடிப்படையில்தான் அதிக விவாகரத்து வழக்குகள் தாக்கல் செய்யப்படுகின்றன. காரணம் இதுவே உள்ள காரணிகளின் ஓரளவு இலேசானதாக உள்ளது.

**சோரம் போதல் : Adultery**

சோரம் போதல் என்பது கணவனோ அல்லது மனைவியோ தனது மனைவியோ அல்லது கணவனோ அல்லாத வேறு ஒருவருடன் உடலுறவு கொள்வதைக் குறிக்கின்றது. இது ஒரு திருமணக் குற்றமாகக் குறிப்பிடப் பட்டு விவாகரத்துக் கோரப்படுகின்றது.

ஆனால் இக்குற்றத்தை நீதிமன்றத்திற்கு முன் கொண்டு செல்லும் போது நிருபிப்பது என்பது மிகவும் சிரமமாக உள்ளது. அதாவது ஒருவர் சோரக் குற்றம் புரிந்தார் என்று கூறுபவரே அதனைச் சந்தேகமின்றி நிருபிக்க வேண்டும். இதற்காக அவர் யாருடன் சோரம் புரிந்தாரோ அவரை இணை எதிராளியாக (Co-defendant) வழக்கில் போட வேண்டும். இவ்வாறு சந்தேகமின்றி நிருபிக்கத் தவறின் அந்த இணை - எதிராளி பின்னர் குறிப்பிட்ட வழக்காளிக்கு எதிராக வழக்குப் போடக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு.

ஆகவே சோரம் போதல் என்ற அடிப்படையில் விவாகரத்துக் கோருவது என்பது ஒரு கஸ்ரமான காரியமாகும்.

**குணப்படுத்த முடியாத மலட்டுத்தன்மை :**

திருமணத்தின் போது திறத்தவர்களில் ஒருவர் (கணவன் / மனைவி) பிள்ளை பெற்றுக்கொள்ளக் கூடியதான நிலையில் இருக்கவில்லை என்பதை நிருபிக்க வேண்டும். அதாவது திருமணத்தின்போது அவர் மலடாக இருந்தார் என்பது நிருபிக்கப்பட வேண்டும். ஆனால் திருமணம் நடந்து பின் வந்த காலங்களில் ஏதாவது விபத்துப் போன்றவற்றின் மூலம் அவர் அந்த நிலையை அடைந்திருந்தால் அது ஒரு அடிப்படையாக ஏற்கப்பட மாட்டாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே எமது பொதுச் சட்டத்தில் மேற்கூறிய வழிகளின் அடிப்படையில் விவாகரத்துப் பெறலாம்.

விவாகரத்து வழக்குப் போடும் உரிமை யாருக்குண்டு ?

குற்றமற்ற திறத்தவரே விவாகரத்து வழக்கைத் தாக்கல் செய்ய முடியும். உதாரணமாக வன்ம உறவறுத்தல் மூலம் மனைவியை வீட்டை விட்டு வெளியேற்றிவிட்ட கணவர் தன்னை வீட்டைவிட்டு வெளியேறிவிட்டார். என்ற அடிப்படையில் மனைவி வெளியேறக் காரணமாயிருந்த (குற்றம் செய்த) கணவர் வழக்கு தாக்கல் செய்ய முடியாது. மனைவியே கணவனுக்கு எதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்யலாம்.

## நீதி முறைப்பிரிவினை - Judical Seperation

நீதி முறைப் பிரிவினை என்பது விவாகரத்துப் போன்றல்லாமல் கணவனும் மனைவியும் பிரிந்து வாழ்வதைக் குறிக்கும் அதாவது இங்கு விவாகரத்துப் பெறப்படாமல் கணவன், மனைவியாகவே வாழ்வர். ஆனால் பிரிந்து வாழ்வார்கள். இது பின்வரும் சந்தர்ப்பங்களில் இடம் பெறும்.

01. கணவனும் மனைவியும் விவாகரத்துப் பெற விரும்பாத போது
02. கணவனும் மனைவியும் விவாகரத்துப் பெற முடியாத போது

அதாவது இருவரும் திருமணக்குற்றம் புரிந்திருப்பின் விவாகரத்துப் பெற முடியாத அவ்வாறான சந்தர்ப்பங்களில்.

03. வாழ்க்கைத்துணையுடன் சேர்ந்து வாழ்வது ஆபத்தை விளைவிக்கும் என்ற சந்தர்ப்பங்களில் அதாவது கொடுமைப்படுத்தல், குடிபோதை போன்ற சந்தர்ப்பங்களில்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்து நீதி முறைப் பிரிவினை பெற்று பிரிந்து வாழலாம். தேவை ஏற்படும் போது நீதிமன்றத்திற்கு மீண்டும் விண்ணப்பம் செய்து சேர்ந்தும் வாழலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் விவாகரத்துப் பெற்றால் மீண்டும் சேர்ந்து வாழ முடியாது. அவ்வாறாயின் மீண்டும் புதிதாகத் திருமணம் செய்ய வேண்டும். அத்துடன் இந்த நீதி முறைப் பிரிவினை பெற்று தொடர்ந்து வாழ முடியாத சந்தர்ப்பத்தில் இரண்டு வருடத்தின் பின் விவாகரத்துக் கோரி வழக்குத்தாக்கல் செய்யலாம். இது சட்டம் அல்ல நடைமுறையே ஆகும்.

## கண்டியச் சட்டத்தின் கீழ் விவாகரத்து : Divorce under the Kandian Law

பொதுச் சட்டத்தைப் போன்றே கண்டியச் சட்டத்திலும் விவாகரத்துக்கான அடிப்படைக்காரணிகள் கூறப்பட்டுள்ளன. அவையாவன.

01. மனைவியின் சோரம்

02. கணவனின் சோரத்துடன் கூடியதகாத நடத்தை. இங்கு பார்த்தால் மனைவியின் சோரம் மட்டும் போதுமானது. ஆனால் கணவனுக்கு சோரத்துடன் அவர் தகாத நடத்தையுடையவர் என்பதும் நிருபிக்கப்பட வேண்டும்.

03. முழுமையானதும், தொடர்ந்ததுமான பிரிந்து வாழுதல். அதாவது கணவனோ மனைவியோ தொடர்ச்சியாக முற்றாக பிரிந்து வாழும் சந்தர்ப்பங்களிலும் விவாகரத்துக் கோரலாம்.

04. கணவன், மனைவி சந்தோசமாக இணைந்து வாழமுடியாமை

05. இருவரின் ஒத்த சம்மதம் அதாவது கணவனும் மனைவியும் ஒத்து தாம் பிரிந்து வாழ்வோம் என்று தீர்மானித்தல்.

06. தொடர்ச்சியாகக் கணவனால் அல்லது மனைவியால் கொடுமைப்படுத்தப்படல்.

07. கணவன் அல்லது மனைவி ஐந்து வருடம் சிறையில் இருத்தல்

08. சித்தசுவாதீனமற்றிருத்தல். அதாவது பித்துப்பிடித்த நிலை

மேற்போன்ற காரணங்களுள் ஏதாவது ஒன்றின் அடிப்படையிலும் கண்டியச் சட்டத்தின் கீழ் விவாகரத்துப் பெறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லீம் சட்டத்தின் கீழ் விவாகரத்து : Divorce under the Muslim Law

முஸ்லீம் சட்டத்தின் கீழ் விவாகரத்து என்பது பொதுச் சட்டம், கண்டியச் சட்டத்திலும் வேறுபட்டது. இச் சட்டத்தின் கீழ்

இருவரின் ஒத்த சம்மதத்தின் அடிப்படையில் விவாகரத்துப் பெற முடியும். ஆனாலும் இவ்விடயம் தொடர்பில் கணவனுக்கும், மனைவிக்கும் சரி சமமான உரிமை கிடையாது. அதாவது கணவன் எந்தவிதகாரணமும் கூறாமல் விவாகரத்துப் பெற முடியும். ஆனால் மனைவி அவ்வாறல்ல, அவரது உரிமை விவாகரத்துத் தொடர்பில் கணவனிலும் பார்க்க மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

### கணவனால் விவாகரத்துச் செய்யப்படும் முறை : Ways of Divorce by the husband

முஸ்லீம் சட்டத்தில் கணவன் எந்தவித காரணமும் கூறாமல் தனது மனைவியை விவாகரத்துச் செய்யலாம் இதனைத் ''தலாக்'' கூறுவதன் மூலம் செய்யலாம்.

### ''தலாக்'' நடைமுறை (Talaq)

முதலில் தனது விவாகரத்து செய்யும் எண்ணத்தைத் தனது பகுதியிலுள்ள காதிக்குத் *(Quazi)* தெரிவிக்க வேண்டும். காதி அதனை மனைவிக்கு அறிவித்து உற்றார், உறவினர்களின் உதவியுடன் இருவரையும் இணக்கம் செய்ய முயற்சிப்பார். அம்முயற்சி தோல்வி கண்டால் கணவன் காதிக்கு அறிவித்தல் கொடுத்த ஒரு மாதத்தின் பின் ''தலாக்'' உரைக்க அனுமதிக்கப்படுவார்.

இவ்வாறு ''தலாக்'' உரைத்த பின்பு மீண்டும் காதி இருவரையும் இணங்க வைக்கத் தனது முயற்சியை மேற்கொள்வார். அந்த இரண்டாவது முயற்சியும் தோற்றால் அதன் பின்பு மூன்று மாதங்களின் பின்னர் மீண்டும் ஒரு முறை இணக்கத்திற்கு முயற்சி செய்து இறுதியாகத் தலாக் உரைத்து விவாகரத்துக் கொடுக்கப்பட்டுப் பதியப்படும். இவ்வாறு முஸ்லீம் சட்டத்தில் ஒரு கணவனால் விவாகரத்துச் செய்யப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போன்று மனைவியாலும் விவாகரத்துச் செய்யப்படலாம் அதனைப் பின்வரும் அடிப்படையில் பெறலாம்.

## பஸ்ஸா (Fasha)

கணவன் விவாகரத்துப் பெறுவது போன்று மனைவி எவ்வித காரணமும் இல்லாமல் விவாகரத்துப்பெற முடியாது. மனைவியானவள் தகுந்த சில காரணங்களைக் கூறி அதன் அடிப்படையிலேயே விவாகரத்துப் பெறலாம். அவற்றிலே

01. கணவன் மனைவியை அடிக்கடி துன்புறுத்தினால் அல்லது,
02. மனைவியினது ஆதனங்களைப் பராமரிக்கத் தவறுதல் அல்லது,
03. மனைவியைக் கைவிட்டுச் செல்லல் போன்ற காரணங்களின் அடிப்படையில் ''பஸ்ஸா'' விவாகரத்துக் கோரிக் காதி நீதிமன்றுக்கு விண்ணப்பிக்கலாம். இவ்வாறு கணவனின் குற்றத்தை இரண்டு சாட்சியங்களின் மூலமாக மனைவி நிருபிக்க வேண்டும்.

## குல்லா (Khula)

பெண்கள் தமது திருமண வாழ்வில் சந்தோசமாக இல்லையெனில் கணவனின் சம்மதத்துடன் விவாகரத்துப் பெறலாம். இதனையே குல்லா விவாகரத்து என்று கூறப்படுகின்றது. அப்போது அவளது சீதனத்தையும் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு சட்டங்களிலும் வெவ்வேறு அடிப்படைகளில் விவாகரத்துப் பெறப்படுவதை நாம் அறியக்கூடியதாக உள்ளது.

## பிள்ளையின் பாதுகாவல் Custody

பிள்ளையின் பாதுகாவல் ஏன்பது பெற்றோர்கள், விவாகரத்து மூலமாகவோ, அல்லது வேறு வகையிலோ பிரிந்து வாழும் போது அவர்களின் பராயமடையாத பிள்ளைகள் (Minor Children) தொடர்பில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது பாதுகாவலை யாரிடம் ஒப்படைப்பது என்பது பற்றியதாகும். அதாவது தாயும் தந்தையும் பிரிந்து வாழும் போது பிள்ளைகளை யார் பொறுப்பில் விடுவது என்பதாகும்.

இந்த விடயம் சட்டத்துக்குச் சட்டம் சற்று வேறுபடுகின்றது.

## பொதுச் சட்டத்தின் படி Under the General Law

பெற்றோர்கள் பிரிந்து வாழும் சந்தர்ப்பங்களில் தந்தைக்கே சட்ட ரீதியான பாதுகாவல் உரிமை வழங்கப்படுகிறது. அதாவது பராயமடையாதவர்களின் பாதுகாவல் தொடர்பில் தந்தைக்கே சட்ட ரீதியான உரிமையினை வழங்குகிறது. ஆனாலும் அப்பிள்ளைகளின் அதி உயர்பாதுகாவலன் என்ற ரீதியில் நீதிமன்றமானது தாய்க்கு அவ்வுரிமையை வழங்கலாம். இங்கு நீதிமன்றமே யாரிடம் பிள்ளையின் பாதுகாவலை விட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும். ஆனால் இந்த விடயம் முஸ்லீம் சட்டத்திற்கு ஏற்புடையதன்று.

அத்துடன் பிள்ளையின் பாதுகாப்பு சேமநலன் தொடர்பாகத் தந்தை தகுதியான ஆண் இல்லை என்பதைத் தாய் எண்பிக்க (நிரூபிக்க) வேண்டும். அவ்வாறு எண்பிப்பின் தாய் பாதுகாவலைப் பெறமுடியும். அவ்வாறு தாயிடம் பிள்ளையின் பாதுகாவல் ஒப்படைக்கப்படினும், தந்தையே எப்பொழுதும் 'பாதுகாவலன்' (Guardian) என்ற நிலையில் கணிக்கப்படுவார். அவர் பிள்ளையின் முன்னேற்றம் மற்றும் கல்வி போன்றவை தொடர்பில் தந்தைக்கே முடிவெடுக்கும் உரிமையுண்டு. அத்துடன் தந்தையின் வாழ்காலத்தின் போது தாயானவள் பிள்ளையின் இயற்கைப் பாதுகாவலாக (Natural Guardiun) இருக்க முடியாது.

ஆகவே பொதுச்சட்டப்படிப் பிள்ளையின் பாதுகாவல் தொடர்பில் தந்தைக்குச் சட்டரீதியான உரிமையினைச் சட்டம் வழங்கியுள்ளதைக் காணலாம்.

## முஸ்லீம் சட்டத்தின் படி : Under the Muslim Low

பொதுச் சட்டம் போன்று அல்ல, பராயம் அடையாத பிள்ளையின் பாதுகாவல் தாய்க்கே உண்டு. ஆனால் இந்த நிலைமை பிள்ளைகளின் வயது, பால், முஸ்லீம் பிரிவுகளுக்கேற்ப வேறுபடும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சாபி' பிரிவு சட்டப்படி (Shafi Law) பெண்பிள்ளைகளின் பாதுகாவல் தொடர்பில் அப்பிள்ளை திருமணம் முடிக்கும் வரை தாய்க்கே பாதுகாவல் உரிமை உண்டு. இந்த நிலைமை ஆண் பிள்ளை தொடர்பில் 07 வயது வரைக்கும் மட்டுமே தாய்க்குரியதாகும். 07 வயதுக்கு பின் தந்தைக்கு இவ்வுரிமை வழங்கப்படுகிறது.

''ஹனாபி'' பிரிவு சட்டப்படி (Hanafi Law) இங்கு பெண் பிள்ளைகள் 15 வயதையடையும் வரை தாய்க்கே பாதுகாவல் உரிமை உண்டு. ஆண் பிள்ளை தொடர்பில் 07 வயது வரைக்கும் தாய்குண்டு. பின்னர் 07 வயதுக்கு மேற்பட்டால் அவர்கள் யாரிடம் செல்ல வேண்டும் என்பதைத் தாங்களே தீர்மானிப்பர். அதாவது தாயிடமா அல்லது தந்தையிடமா என்பதை அந்த ஏழு வயதைப் பூர்த்தி செய்த ஆண் பிள்ளையே தீர்மானிக்கும் உரிமை உண்டு.

எப்படியிருப்பினும், இங்கு நீதிமன்றமே பிள்ளையின் நலன் தொடர்பில் முடிவெடுக்கும் பூரண அதிகாரம் கொண்டிருப்பதால் மேற்கூறப்பட்ட படி 07 வயதை அடைந்த ஆண் பிள்ளைகள் தொடர்பில் முடிவெடுக்கும். அதன்படி தந்தைக்குக் கட்டாயம் வழங்கவேண்டும் என்றில்லை. தாயிடமே தொடர்ந்தும் இருக்க வைக்க முடியும்.

அத்துடன், மேற்படி முஸ்லீம் சட்டப்பிரிவுகளின் படி தாயும் பொருத்தமான ஆள் அல்ல என நீதிமன்றம் கருதுமாயின் தாயின் தாய்க்கு அல்லது தாயின் சகோதரிகளுக்குப் பாதுகாவல் உரிமையை வழங்கும். ஆனால் தந்தைக்கு அல்ல

பிள்ளைகளின் பாதுகாவல் உரிமை முஸ்லீம் பெற்றோரிடையே பிணக்குத் தோன்றின் ஏனைய பெற்றோர்கள் போன்று (District Court) மாவட்ட நீதிமன்றத்துக்கே நிவாரணம் கோரிச் செல்ல வேண்டும். ஆனால் காதி நீதிமன்றுக்கு அல்ல.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழியுரிமை (சொத்துரிமை) - Inheritance

வழியுரிமை அல்லது சொத்துரிமை என்னும் போது இறந்த ஒருவருக்குச் சொந்தமான சொத்துக்கள் பின்னாலுள்ள அவரது நெருங்கிய உறவினர்களுக்கு எவ்வாறு சென்றடைகின்றன, என்பதாகும். இது இரு வழிகளின் மூலம் சென்றடையலாம்.

01. இறுதி விருப்பாவனம் மூலம் - அதாவது இறந்தவர் இறப்பதற்கு முன்னரே தான் விரும்பியவர்களுக்கு உயில் (இறுதிவிருப்பாவனம்) எழுதி உரிமையாக்குவது. இது எழுத்தின் மூலம் இருப்பதால் இங்கு எந்தப் பிரச்சனையும் எழுவதில்லை.

02. ஆனால் இறுதி விருப்பாவனமின்றி ஒருவர் இறப்பின் பின் சொத்து சென்றடைதல். இது இன்னார்க்கு என்று எழுதப்படாத படியால் யார் யாருக்கு, எவ்வளவு உரிமையாக்குவது என்ற பிணக்கு எழுகின்றது. இவ்வாறான வேளையில் எவ்வாறு யார் யாருக்கு அவை சென்றடைய வேண்டும் எனச் சட்டம் வரையறுத்துக் கூறுகின்றது.

இது ஒவ்வொரு சட்டத்திலும் வெவ்வேறு விதமாக அமைந்துள்ளதைக் காணலாம்.

## பொதுச்சட்டத்தின் கீழ் சொத்துரிமை
## Inheritance under the General Law

பொதுச்சட்டப்படி வாழ்க்கைத் துணைவர்களில் சொத்துறுதியற்ற ஒருவர் இறந்தால், இறக்காத மற்ற வாழ்க்கைத்துணைக்கு அரைப்பங்கு, அடுத்த அரைப்பங்கு இருக்கும் எல்லாப் பிள்ளைகளுக்கும் சமமாகப் பிரிக்கப்படும். இங்கு ஆண், பெண் பிள்ளைகளுக்குள் வேறுபாடு கிடையாது. உதாரணமாக கணவன் இறந்தால் மனைவிக்கு அரைப்பங்கு, ஆண், பெண் பிள்ளைகளுக்கு மீதி அரைப்பங்கு சமமாகப் பிரிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ-ம்) மொத்தச் சொத்து - 60,000/- எனின்
மனைவிக்கு - 30,000/-
பிள்ளைக்கு - (ஆண்) 15,000/-
(பெண்) 15,000/-

இங்கு நெறிமுறையற்ற பிள்ளைகளுக்குத் தந்தையின் சொத்தில் பங்கு கிடையாது ஆனால் தாயின் சொத்தில் உரிமையுண்டு.

## கண்டியச் சட்டத்தின் கீழ் சொத்துரிமை : Inheritance under the Kandiyan Law

கண்டியச் சட்டத்தில் சொத்துரிமை தொடர்பான நோக்கங்களுக்காகச் சொத்துக்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன.

01. கொள்ளப்பட்ட அல்லது தேடிய ஆதனம் - இது திருமணத்தின் போது கணவன், மனைவியால் பெறப்பட்டவையாகும். இதனை அசையும் ஆதனம், அசையா ஆதனம் என்று கூறலாம்.
அசையும் ஆதனம் - (உ-ம்) வாகனம், தளபாடங்கள்
அசையா ஆதனம் - (உ-ம்) காணி, வீடு போன்றன

02. பரவணி ஆதனம் (பரம்பரை ஆதனம்) பரம்பரை ஆதனம் என்பது கணவனின் பரம்பரை ஆதனமாகும். அதாவது கணவனால் கொண்டுவரப் பட்ட சொத்துக்களாகும்.

இதன்படி பார்த்தால் கொள்ளப்பட்ட ஆதனத்தில் அனைவருக்கும் சமமான உரிமையுண்டு அதாவது கணவன் இறந்தால் மனைவி, பிள்ளைகள் (நெறிமுறையான, நெறிமுறையற்ற) என்பவர்களுக்குச் சமமாகப் பிரிக்கப்படும்.

ஆனால் பரவணி ஆதனத்தில் மனைவிக்கு சீவிய உரித்து அல்லது பராமரிப்பு மட்டுமே உண்டு. மனைவிக்குச் சொத்தில் பங்கு இல்லை. பெண்ணின் இறப்பின் பின்பு அச் சொத்துக்கள் பிள்ளைகளுக்கு (நெறிமுறையான, நெறிமுறையற்ற சமமாகப் பங்கிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் பரவணி ஆதனத்தில் நெறிமுறையான, நெறிமுறையற்ற பிள்ளைகளுக்கு சமமாக பங்கிடப்படும். ஆனால்விதிவிலக்காக மகள் தீக (Diga) திருமணம் செய்திருந்தால் சொத்துரிமை இல்லை. ஆனால் வேறு பிள்ளைகள் இல்லாவிட்டால் உரிமை உண்டு. அத்துடன் நெறி முறையற்ற பிள்ளைகளுக்கு பரவணி ஆதனத்தில் உரிமை இல்லை. அத்துடன் மனைவியின் இறப்பின் பின் கணவனுக்கு மனைவியின் சொத்தில் உரிமையில்லை. மனைவியின் சொத்து அவரின் நெறிமுறையான, நெறிமுறையற்ற பிள்ளைகளுக்குச் சமமாக பிரிக்கப்படும்.

## முஸ்லீம் சட்டத்தின் கீழ் சொத்துரிமை : Inheritance under the Muslim Law

முஸ்லீம் சட்டத்தில் சொத்துரிமை சற்று வித்தியாசமானது. இங்கு இறந்த ஒருவரின் சொத்தானது

01. தாய்க்கு 1/6 பங்கு - பிள்ளைகள் இல்லாவிடின் 1/3 பங்கு
02. தந்தைக்கு 1/6
03. மனைவிக்கு 1/8 - பிள்ளைகள் இல்லாவிட்டால் 1/4 பங்கு (ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளாயின் சமமான பங்குண்டு)
04. கணவன் - 1/4 பங்கு பிள்ளைகள் இல்லாவிட்டால் 1/2
05. மகள் (ஆண் பிள்ளைகள் இல்லாவிட்டால்) 1/2
06. மகன் - 1/2 பங்கு

இங்கு சொத்துப் பங்கீடு சமனற்ற தன்மையுடையதாகக் காணப்படுகின்றதை அவதானிக்கலாம்.

### தேச வழமைச் சட்டத்தின் கீழ் சொத்துரிமை :

தேச வழமைச் சட்டம் என்பது வடமாகாணத் தமிழர்களின் சொத்துக்கள் சம்மந்தமாக ஆளும் சட்டமாகும். அதாவது யாழ்ப்பாணத் தமிழர்களின் சொத்துரிமைகள் சம்பந்தமான விசேட சட்டமே இது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேச வழமையின் கீழ் சொத்துக்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்படுகின்றது.

01. சீதனம் - பெண் கொண்டு வருவது

02. தேடிய தேட்டம் - திருமணத்தின் போது இருவரும் தேடியது.

03. முதுசம் - கணவன் கொண்டு வருவது

இங்கு இறந்த ஒருவரின் சொத்துரிமையானது சீதனம், முதுசம் தொடர்பில் உயிர்வாழும் வாழ்க்கைத் துணைக்குப் பிள்ளைகளுக்கும் சமமாகவும் தேடிய தேட்டம் தொடர்பில் உயிர் வாழும் வாழ்க்கைத் துணைக்கு அரைப்பங்கு மற்றைய அரைப்பங்கு பிள்ளைகளுக்கு சமமாகப் பங்கிடப்படும்

இவ்வாறு ஒவ்வொரு சட்டத்திலும் ஒவ்வொரு விதமாக சொத்துரிமைகள் சென்றடைவதை நாம் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர கால ஒழுங்கு விதிகள்

# (Emergency Regulations)

நேரம் : 3 மணி

பயிற்சிப் பொருள் : நிறப்பேனாக்கள், எழுதுபலகை, பேப்பர், ஒட்டும் நாடா

பயிற்சி முறை : விரிவுரை, குழுக் கலந்துரையாடல்

அறிமுகம் :

அவசரகால ஒழுங்கு விதிகள் அல்லது அவசரகாலச் சட்டம் என்பது "பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் (The Public Security Ordinance) கீழ் ஜனாதிபதியானவர் நாட்டின் நலன் கருதிக் காலத்துக்குக் காலம் சில ஒழுங்கு விதிகளை ஆக்குவார். அவ்வாறு ஆக்கப்பட்டவற்றில் 1994ம் ஆண்டு நவம்பர் மாதம் 4ம் திகதி நாட்டின் பாதுகாப்புக் கருதி ஆக்கப்பட்டதே தற்போதய நடைமுறையிலுள்ள அவசரகல சட்டமாகும்.

இந்தச் சட்டத்தின் கீழ்தான் தற்போது எமது நாட்டில் இடம்பெறும் கைதுகள் தடுத்துவைத்தல் தேடுதல்கள் என்பன இடம் பெறுகின்றன. இச் சட்டம் ஒவ்வொரு மாதமும் பாராளுமன்றத்தில் வாக்கொடுப்புக்கு விடப்பட்டுப் பெரும்பான்மை வாக்குகள் பெறுவதன் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இச் சட்டம் முதலில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் மற்றும் கொழும்பையும் அதனை அண்டிய சில பகுதிகளுக்கும் என வரையறுக்கப்பட்டு இருந்தது. ஆனால் தற்போது இலங்கைபூராவும் இச்சட்டம் அமுலில் உள்ளதைக் காணலாம்.

## இச் சட்டத்தின் சில பொதுவான பிரிவுகள் :

இதன் விதி (பிரிவு) 02 - அவசரகால ஒழுங்கு விதிகளின் பொருள் கோடல்களைப் பற்றிக் கூறுகின்றது. இதன்படி ஆயுதப்படைகள், சட்டமா அதிபர், அத்தியாவசிய சேவை, வெடிபொருள், துவக்கு, பொலிஸ் போன்றவற்றினைப் பற்றிய விளக்கத்தினைக் (பொருளை) கூறுகின்றது.

பிரிவு - 03 இன் படி ஜனாதிபதியின் அதிகாரம் பற்றிக் கூறுகின்றது. அதாவது சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட அனைத்து அதிகாரங்களும் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைக் குறைத்து மதிப்பிடுதலோ கேள்விக்குட்படுத்தலோ ஆகாது. அத்துடன் ஜனாதிபதியானவர் தனது அதிகாரங்களைத் அல்லது தத்துவங்களைத் தகுதி வாய்ந்த அதிகாரிகளுக்குக் கையளித்தல் பற்றி பிரிவு - 04 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் "தகுதி வாய்ந்த அதிகாரி" என்றால் யார் என்பது பற்றி பிரிவு - 05 கூறுகின்றது.

இச் சட்டத்தின் 8வது பிரிவு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அதிபதி பற்றிக் குறிப்பிடுகின்றது. அத்துடன் அவரது சேவைகள், அவர் எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றிக் கூறப்படுகின்றன. அத்தோடு பிரிவு 9 ஆனது பிரதேச செயலாளர்களின் தத்துவங்களையும், கடமைகளயும் பற்றிக் கூறுகின்றது.

இந்த சட்டத்தின் பிரிவு 10தின் படி சிவில் நிருவாகத்திற்கான ஒன்றிணைப்பாளரை நியமித்தல் பற்றிக் கூறுகின்றது. அதாவது ஜனாதிபதியானவர் காலத்துக்குக் காலம், தேவைக்கேற்ப, இவ்வாறு ஒன்றிணைப்பாளரை நிரூபிக்க முடியும்.

## <u>ஊரடங்குச் சட்டம் (Curfew)</u>

இது பற்றி இச் சட்டப் பிரிவு 11ல் கூறப்பட்டுள்ளது. இதன்படி தேவைக்கேற்ப தேவையான இடங்களில், தேவையான நேரத்தில் ஊரடங்குச் சட்டத்தினை அமுல்படுத்தலாம். ஊரடங்குச் சட்ட வேளைகளில் பொதுத் தெரு, பொது இடங்களைப் போக்குவரத்திற்கோ, நடமாட்டங்களுக்கோ பயன்படுத்தக் கூடாது. ஆயினும், எழுத்திலான அனுமதிப்பத்திரம் பெற்று அவசர வேலைகளில் வெளியில் செல்ல முடியும்.

அத்துடன் அவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் புரியப்பட்ட குற்றங்கள் பற்றி விளங்குவதற்கான நியாயாதிக்கம் சட்டமாதிபருக்கு உண்டு. அதாவது இச்சட்டத்தின் கீழ் புரியப்படும் குற்றங்கள் பற்றி விசாரணை செய்வதற்காகக் குறித்த குற்றம் நடந்த இடத்திலுள்ள நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. இங்கு இது விடயம் தொடர்பில் நீதவானை விடச் சட்டமாதிபருக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இங்கு மேல் நீதிமன்ற வழக்குவிசாரணை பற்றி இச் சட்டத்தின் பிரிவு 14ல் கூறப்பட்டுள்ளது. அதாவது இச்சட்டத்தின் கீழ் புரியப்பட்ட குற்றங்கள் தொடர்பாக ஆரம்ப விசாரணை இன்றியே மேல் நீதிமன்றத்தில் ஜுரர்கள் இன்றி விசாரணை மேற் கொள்ளப்படும். இதற்குச் சான்றாக அவரது வாக்கு மூலம் பயன்படுத்தப்படும். இங்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் போல் குற்றம் சாட்டப்பட்டவருக்குக் குற்றப்பத்திரிகை வழங்கப்படும். அத்துடன் இச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்குப் பிணை வழங்க முடியாது. எனினும் சட்டமாதிபரின் அனுமதியுடன் பிணை வழங்கப்படலாம். என இச்சட்டம் கூறுகின்றது.

இச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்யும் படி நீதவான் கட்டளை இடலாம். அவ்வாறு கைது செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் அந்த ஆள் இல்லாமலே வழக்கு நடவடிக்கை ஆரம்பிக்கலாம்.

அத்துடன் இச் சட்டப்பிரிவு 15ல் இச்சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்குகளுக்கு ஏனைய வழக்குகளை விட விசாரணையின் போது நீதிமன்றங்களில் முன்னுரிமை கொடுக்கப்படல் வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

## தேடுதல், கைதுசெய்தல், தடுத்து வைத்தல்
## Search Arrest and Detention

பிரிவு - 17 ஆனது ஆட்களைத் தடுத்து வைத்தல் தொடர்பான விடயங்களைக் கூறுகின்றது. அதாவது ஏதாவது சட்டமுரணான நடவடிக்கையைச் செய்வதினின்றும் தடுப்பததற்காக ஒருவரைத் தடுத்துவைக்க முடியும். இவ்வாறான தடுத்துவைத்தல் இரண்டுவகையில் இடம் பெறும்.

01. ஒரு செயலைப் புரியாமல் தடுப்பதற்கான தடுப்புக்காவல். - Preventive Detention

02. புனர்வாழ்வுத் தடுப்புக் காவல் - Detention of Rehabilitation


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன்படி 1வது தடுப்புக் காவலானது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் இருந்து பெறப்பட்ட கட்டளையின் மூலம் செயற்படுத்தப்படுகின்றது. இந்தத் தடுப்புக் காவலானதுபல காரணங்களின் அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றது.

01. தேசிய பாதுகாப்புக்கும், பொது அமைதியை நிலைநாட்டுவதற்கும், அத்தியாவசியத் தேவைகளைப் பேணுவதற்கும் பாதகமான முறையில் ஏதேனும் செயலாற்றுவதினின்றும் தடுப்பதற்கும்.

02. இச் சட்டப் பிரிவுகளின் படி ஏதேனும் தவறுகளைப் புரிவதிலிருந்து தடுப்பதற்கும் அல்லது உதவியளிப்பதை அல்லது உடந்தையாய் இருப்பதைத் தடுப்பதற்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மூன்று மாத காலத்திற்கு மேற்படாமல் தடுத்து வைக்கக் கட்டளை இடலாம். ஆயினும் இவர்களை மூன்று, மூன்று மாதம் நீடிக்கப்பட்டு அந்நீடிப்பானது ஒரு வருட காலம் வரை செயற்படலாம். இங்கு பயங்கரவாதத் தடைச் சட்டப்படி தடுத்து வைக்கும் காலப்பகுதியானது 18 மாதங்களை விட 06 மாதகாலம் குறைவாக உள்ளதைக் காணலாம்.

எனினும் இச்சட்டப்படி ஒரு வருடத்துக்கு மேல் ஒருவரைத் தொடர்ந்து தடுத்து வைக்க வேண்டுமாயின் அவர் எந் நிகழ்வுகளின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட வேண்டும். என்ற காரணத்தைப் பாதுகாப்பு அமைச்சு செயலாளரிடம் இருந்து பெறப்பட்ட அறிக்கையை நீதவான் நீதிமன்றில் சமர்ப்பித்து, அதற்கு நீதவான் திருப்திப்படின் நீடிக்கலாம். சந்தேக நபர் தடுத்துவைக்கப்படவேண்டிய இடத்தைப் பாதுகாப்பு அமைச்சு செயலாளரே தீர்மானிப்பார். நீதவான் அல்ல. அத்துடன் மேற்கூறிய பிரிவு 17 இன் உப பிரிவு 4ல் தடுத்துவைப்பதற்கான இடங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதன்படி 374 இடங்களை ஒதுக்கியுள்ளனர். இவ்விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குப் பூரண அதிகாரங்கள் உண்டு. அத்துடன் புனர்வாழ்வு தடுப்புப் பற்றிப் பின்னர் பார்ப்போம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தேடுதல் கைது செய்தல் (Search and Arrest)

தடுத்து வைத்தல் பற்றி மேலே பார்த்தோம் இனித்தேடுதல் பற்றியும் ஆதனங்களைக்கைப்பற்றுதல் பற்றியும் பார்ப்போம். இது பற்றி இச்சட்டப்பிரிவு 18ல் கூறப்பட்டுள்ளது. இதன்படி கைது செய்து தடுத்து வைத்தலுக்கான அதிகாரங்கள் பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஆயுதம் தாங்கிய படையினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கைது செய்யும் போது அவர்கள் தேவைக்கேற்றபடி வலோத்காரத்தைப் பயன்படுத்த முடியும் என்றும் இச்சட்டம் கூறுகிறது. அத்துடன் சாதாரண சட்டங்கள் போலன்றி இச்சட்டத்தின் கீழ் ஒருவரைப் பிடியாணை (Warrent) இன்றி கைது செய்யும் அதிகாரம் உண்டு. ஆனால் கைதுக்கான தகுந்த காரணம் காட்டப்படுதல் மிக அவசியமாகும். அக்காரணங்களாக செய்த குற்றம் செய்து கொண்டிருக்கும் ஒரு குற்றம், அல்லது மேற்படி குற்றங்கள் புரியப்பட்டதாக அல்லது புரியப்படுவதாக அல்லது புரியப்பட உள்ளதாக ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது ஆயுதப்படையினர் நியாயமாக சந்தேகிப்பின் கைது செய்யலாம். அத்துடன் அக் குற்றம் தொடர்பான ஏதேனும் வாகனம், மரக்கலம், பொருள், பதார்த்தம் போன்றவற்றை தேடுகை செய்யலாம், தடுத்து வைக்கலாம்.

இனி இப்பிரிவின் படிகைது செய்தல் தொடர்பாக மேலும் கூறுகையில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே ஆயுதப்படையினரால் கைது செய்யப்படும் ஒரு நபரை 24 மணித்தியாலயங்களுக்குள் அருகில் இருக்கும் ஒரு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் கையளிக்கப்பட வேண்டும் என்றும் கைது செய்த உத்தியோகத்தர், கைதுசெய்யப்பட்டமை தொடர்பான ஒரு பற்றுச்சீட்டை (Receipt of Arrest) கைது செய்யப்பட்டவரின் வாழ்க்கைத் துணைக்கோ அல்லது அவரது நெருங்கிய உறவினருக்கோ வழங்கப் பட வேண்டும் எனவும் அத்துடன் கைது செய்யப்படும் நபருக்குத் தான் ஏன் கைது செய்யப்பட்டுள்ளேன் என்ற காரணத்தை கைது செய்பவர் அறிவிக்க வேண்டும் என்றும் அத்துடன் கைது செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது ஆயுதப்படையினர் தான் யார் எனவும் தனது பதவி, பெயர் போன்றவற்றையும் கைது செய்பவருக்கு அறிவிக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பற்றுச் சீட்டு (Receipt of Arrest)

கைது பற்றிய பற்றுச் சீட்டில், கைது செய்யப்படுபவரின் பெயர், பதவி போன்றனவும் கைது செய்யப்பட்டவரின் பெயர், முகவரி, கைதுசெய்யப்பட்ட இடம், நேரம், திகதி, தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம் போன்றன அடங்கப்பட்டிருக்க வேண்டும்.

இவ்வாறு பற்றுச்சீட்டு வழங்கப்படமுடியாவிடின் அதற்கான காரணத்தைக் குறிப்பிட வேண்டும். இவ்வாறு கைது பற்றிய பற்றுச்சீட்டு வழங்காவிடின் கைது செய்த உத்தியோகத்தரை மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்குட்படுத்தி அவருக்கு இரண்டுவருட சிறைத்தண்டனை வழங்கப்பட முடியும்.

## பெண்கள், பிள்ளைகள் கைது செய்யப்படுத்தல்
## Arrest of women & Children

பெண்கள் கைது செய்யப்படும் பொழுது இன்னொரு பெண்ணைக் கொண்டு கைது செய்யப்படவோ அல்லது தேடுதல் செய்யபடவோ வேண்டும். அத்துடன் பெண்கள் பிள்ளைகளைக் கைது செய்து கொண்டு செல்லும் போது அவர்கள் தாங்கள் விரும்பிய உறவினர்களைத் தாய், தந்தை, உறவினர் ஒருவரைத் தங்களுடன் கூடவே அழைத்துச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

அத்துடன் கைது செய்யப்பட்டவரிடம் வாக்கு மூலம் ஏதும் பெறப்படவேண்டுமாயின் அவர் விரும்பிய மொழியில் பெறப்படுதல் வேண்டும். அத்துடன் கைது செய்யப்பட்டமை பற்றி 24 மணித்தியாலயங்களுக்குள் தமது உயர் அதிகாரிக்கு அறிவிக்க வேண்டும். அத்துடன் இவ் ஒழுங்கு விதியின் கீழும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழும் அனைத்துக் கைதிகள் பற்றியும் 48 மணித்தியாலயங்களுக்குள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படல் வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு
## (National Human Rights Commission)

மனித உரிமைகளைப் பேணும் நோக்கிலும், மேம்படுத்தும் நோக்கிலும் இலங்கை அரசால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சுயாதீன அமைப்பே இந் நிறுவனமாகும். இது கைதுசெய்யப்படுதல், தடுத்துவைத்தல் பற்றியவர்களின் நலன்கள் ஒழுங்காகப் பேணப்படுகின்றனவா என ஆராய்ந்து கண்டறிந்து தேவைக்கேற்ப நடவடிக்கை எடுக்கும். இதற்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் இடங்களுக்குச் சென்று அவர்களைப் பார்வையிட்டு நடவடிக்கை எடுக்கும்.

## தடுப்புக்கட்டளை - Detention Order

இது பற்றி இச்சட்டப்பிரிவு 19ல் கூறப்பட்டுள்ளது. இதன்படி கைது செய்யப்படும் ஒரு நபரை மேலும் தடுத்து வைக்கப்பட வேண்டும் எனக் கருதின் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அல்லது பிரிகேடியர் தரத்திற்குக் குறையாத தரத்திலுள்ள ஒருவரிடம் இருந்து பெற்ற கட்டளையின் மூலம் தடுத்து வைக்கலாம்.

அதாவது வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கைது செய்யப்பட்ட ஒரு நபரை 60 நாட்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்குத் தடுத்து வைக்க முடியும், வடக்கு - கிழக்குக்கு வெளியேயாயின் 07 நாட்களுக்கு மேற்படாத காலத்திற்குத் தடுத்து வைக்கலாம். இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்த பின்பு மேற்கூறப்பட்ட கால எல்லை முடியும் முன் ஒரு நீதவான் முன்னிலையில் கொண்டுவரப்பட்டு மேலும் தடுத்து வைக்கப்பட்டாலே ஒழிய அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

அத்துடன் அதிகாரம் அளிக்கப்பட்ட ஓர் இடத்திலேதான் ஒருவரைத் தடுத்து வைக்க வேண்டுமே தவிர வேறு இடங்களில் தடுத்து வைக்க முடியாது. அவ்வாறு தடுத்து வைத்தால் தடுத்து வைப்பவர் தவறொன்றுக்குக் குற்றவாளியாவதுடன் மேல் நீதி மன்றத்தில் குற்றம் சாட்டப்படலாம். இதற்கான தண்டனை 6 மாதம் தொடக்கம் 5 வருடம சிறைத்தண்டனையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடம் பற்றிப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நீதவானுக்கு அறிவிக்க வேண்டும். அத்துடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தின் பொறுப்பதிகாரி தடுத்துவைக்கப்பட்டுள்ளவரின் பெயர்ப் பட்டியலை 14 நாட்களுக்கு ஒரு தடவை தனது பகுதியில் அமைந்துள்ள நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். நீதவான் அதனை நீதிமன்ற அறிவிப்புப் பலகையில் இட வேண்டும். அத்துடன் நீதவான் ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தைப் பார்வையிட வேண்டும் அத்துடன் மனித உரிமை ஆணைக்குழு அங்கத்தவர்கள் எந்த இடத்திலும், எந்த நேரத்திலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைப் பார்வையிடும் அதிகாரம் உண்டு.

## பிணை - Bail

இது பற்றி இச்சட்டப்பிரிவு 54ல் கூறப்பட்டுள்ளது. இதன்படி இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் ஒரு நபரை முதல் மூன்று மாதங்களுக்குள் பிணையில் விடுதலை செய்யும் அதிகாரம் நீதவானுக்குக் கிடையாது. ஆனால் சட்டமா அதிபரின் சம்மதத்துடன் பிணையில் விடுதலை செய்யலாம். அத்துடன் மூன்று மாதங்களின் பின் சட்டமா அதிபர் கேட்டுக்கொண்டால் ஒழிய (மேலும் தடுத்து வைத்தல்) அவரை விடுதலை செய்ய வேண்டும். ஆனால் இது இச்சட்டப்பிரிவு 26ன் கீழான குற்றங்களுக்கு இது ஏற்புடையதல்ல. அதற்கு பிணை வழங்கப்பட முடியாது.

ஆனால் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் மேன் முறையீடு நீதிமன்றம் தகுந்ததெனக் காணின் ஒரு நபரைப் பிணையில் விடுதலை செய்யலாம்.

## புனர்வாழ்வளித்தல் - Rehabilitation

இச் சட்டத்தின் பிரிவு - 20 ஆனது புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டியுள்ளவர்கள் பற்றிக் கூறப்படுகின்றது. இதன்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குறிப்பிட்ட நபரைப் புனர்வாழ்வு அளிக்க வேண்டியுள்ளது பற்றி தீர்மானிப்பர் இந் நோக்கத்திற்காக அந்நபரை புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்திடம் ஒப்படைக்கும்படி அமைச்சின் செயலாளர் கட்டளையிடுவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி குறிப்பிட்ட காலத்திற்குப் புனர்வாழ்வு அளிக்கப்படும். குறிப்பிட்ட காலப் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின்னர் அவர் விடுதலை செய்வார். இதற்காக ஒருவரை ஜனாதிபதியானவர் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமாக நியமிப்பார். இந் நியமனம் பற்றி இச் சட்டம் பிரிவு 21ல் கூறப்பட்டுள்ளது.

## சரணடைதல் பற்றி - Re - Surrender

இது பற்றி சட்டப்பிரிவு 22ல் கூறப்பட்டுள்ளது. அதாவது குற்றம் செய்தவர்கள் சரணடையும் சந்தர்ப்பங்களில் அந் நபரை 7 நாட்களுக்குள் சிறைச் சாலை ஆணையாளர் நாயகத்தின் கட்டுக்காவலில் ஒப்படைக்க வேண்டும். இச் சரணடைதல் பற்றி 7 நாட்களுக்குள் அப்பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கப்பட்ட அறிவித்தலின் பிரதி ஒன்றைப் பொலிஸ் அதிகாரி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்ப வேண்டும். அத்துடன் இவ்வாறு சரணடைபவர்களை 60 நாட்களுக்குக் கட்டுக்காவலில் வைக்கப்படலாம். இவ்வாறு தடுத்துவைக்கப்பட்ட பின்பு அவர் இச் சட்டப்பிரிவு 17 மற்றும் 19க்கு அமைய மேலும் தடுத்துவைக்கப் படவேண்டுமாயின் தடுத்துவைக்கப்படலாம். அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களில் ஒரு நீதி மன்றம் முன் கொண்டுவரப்பட்டு விடுதலை செய்யப்படல் வேண்டும்.

இச்சட்டத்தின் பிரிவு - 23 ஆனது சிறைகள் மற்றும் சிறைக் கைதிகள் தொடர்பில் ஆயுதம் தாங்கிய படையினர்களின் உறுப்பினர்கள் சட்டரீதியாக செய்யப்பட்ட கட்டளைகளின் மீது நடவடிக்கை எடுக்கும் உரிமை உண்டு

அதாவது சிறைச்சாலைகளில் சிறைக் கைதிகள் குழப்பம் ஏற்படுத்தும் சந்தர்ப்பங்களில் அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அயுதப்படையினர்களுக்கு எடுக்க பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குற்றங்களும் தண்டனைகளும்

## (OFFENCES AND PENALTIES)

**நேரம்:** 2 மணி

**பயிற்சிப் பொருள்:** நிறப் பேனாக்கள், எழுது பலகை

**பயிற்சி முறை :** விரிவுரை.

**அரசைக் கவிழ்ப்பதற்கான சூழ்ச்சி செய்தல் (COUP):**

இது பற்றி பிரிவு 24ல் கூறப்பட்டுள்ளது. இதன்படி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குச் சூழ்ச்சி செய்தல், சதி செய்தல் அல்லது தூண்டுதல் பாராளுமன்ற உறுப்பினரை, ஆயுதப்படை உறுப்பினரையோ, பொலிஸ் உத்தியோகத்தரை சட்ட ரீதியான உரிமைகளைச் செய்யவிடாது தடுத்தல் அல்லது அரச உடமைகளைச் சேதப்படுத்துதல் அசையும், அசையா ஆதனங்களைச் சேதப்படுத்துதல் போன்றன, மரணதண்டனை அல்லது ஆயுட்கால சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றங்களாகும்.

அத்துடன் நாணயத்தாள்களை அனுப்புதல் அல்லது பெறுதல் போன்றனவும் இச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும் என பிரிவு 27ல் கூறப்பட்டுள்ளது. இதற்கான தண்டனை 10 வருட சிறைவாசமாகும்.

அத்துடன் வெளித்தொடர்புகள், ஆயுதங்கள் சேகரித்தல், உடமையில் வைத்திருத்தல் போன்றனவும் 5 - 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றமாகும். அத்துடன் பிரிவு 29 இன் படி வெடி பொருட்கள், துப்பாக்கி, அபாயகரமான ஆயுதம், தீங்குவிளைவிக்கும், பதார்த்தத்தை வைத்திருத்தல், அவற்றை இடம் பெயர்த்தல், கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் போன்றனவும் தண்டனை விதிக்கப்படக்கூடிய குற்றமாகும். இவற்றுக்கு 5 - 20 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட முடியும்.

அத்துடன் பிரிவு 31 இன்படி துப்பாக்கி வெடி பொருட்கள் போன்றவற்றைத் தமது உடமையில் வைத்திருக்கும் ஒரு நபரை அவற்றை உரிய பாதுகாப்பிடத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும் என பொலிஸ்மா அதிபர் பணிக்க முடியும். இதற்காக மேற்படி பொருட்களை உடமையில் வைத்திருக்கும் நபரை சோதிக்கலாம்., அக்கட்டிடத்தில் உட்புகலாம், தேவைக்கேற்ப உடைக்கலாம். இதனை யாரும் தடுக்க முடியாது. அவ்வாறு தடுப்பது தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவறுகள் புரிய எத்தனித்தல் - Attempt to Commit Offences

இச்சட்டப்பிரிவு 32ன் படி இவ்வொழுங்கு விதியின்கீழான இடம் ஒன்றில் ஏதேனும் தவறொன்றைப்புரிய எத்தனித்தல், முயற்சி செய்தல், உதவியளித்தல், உடந்தையாயிருத்தல் அல்லது வேறுவகையான ஆராய்ச்சி செய்தல் போன்றன ஒரு குற்றமாகக் கருதப்பட்டு விசாரணை செய்யப்பட்டு அவற்றிற்கேற்ப தண்டனை வழங்கப்படும்.

அத்துடன் இச்சட்டப்பிரிவு 33ன் படி குற்றமிழைப்போருக்கு உதவுதல் அல்லது குற்றம் இழைப்பவரைக் கைது செய்வதை அல்லது அவரைத் தண்டித்தலை இடைஞ்சல் செய்தல் போன்றனவும் தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும்.

அத்துடன் பிரிவு 34ன் படி ஆட்கள் குழு ஒன்றினால் புரியப்படும் குற்றம் பற்றி மற்றையவருக்கு தெரியாது என்று தப்பிக்க முடியாது. அக்குழுவில் ஒருவர் குற்றம் செய்யினும் மற்றவர்களும் அதற்கு பொறுப்பாக்கப்படுவர்.

## புலனாய்வும் விளக்கமும் - Investigations and Trials

இச்சட்டப்பிரிவு 37 ஆனது தவறு ஒன்று தொடர்பில் புலன் விசாரணை செய்கின்ற பொலிஸ் உத்தியோகத்தரின் அதிகாரங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது.

இதன்படி அப்பொலிஸ் உத்தியோகத்தர் தவறு செய்தவர் தொடர்பில் அவரை வாய்மொழி மூலம் விசாரணை செய்யவும். அவரது கூற்றை எழுத்தில் பதியவும் வேண்டும். அதனை அப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒப்பமிட்டு உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன் அத்தகைய ஆட்களின் மாதிரிக் கையெழுத்துக்கள், நிழற்படங்கள், விரலடையாளங்கள் மற்றும் அடையாளங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இனி இவ்வாறு விசாரணை செய்யும் ஒரு நபருக்குள்ள உரிமைகளைப் பார்ப்போம். இவ் விடையத்தில் இச்சட்டப்பிரிவு 38ல் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. இதன்படி தடுத்து வைக்கப்பட்டுள்ள எவரையும் பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது ஆயுதம் தாங்கிய படையினர் விசாரணை செய்யும் அதிகாரங்கள் உண்டு. இதற்கு விசாரணைக்குட்படுபவர் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதனைச் செய்யத்தவறின் தண்டிக்கக் கூடிய குற்றமாகும். அத்துடன் இச்சட்டத்தின் பிரிவு 39 ஆனது ஒரு பொலிஸ் உத்தியோகத்தரின் அணுகும் உரிமை பற்றிக் குறிப்பிடுகிறது. அதாவது எவரேனும் ஒரு கட்டுக்காவலில் அல்லது தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போது ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் அவரிடம் சென்று புலனாய்வு செய்யும் நோக்கிற்காகத் தகவல்களைப் பெற உரிமை உண்டு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அது மட்டுமன்றி பிரிவு 40 - 41 வரையானவை பொலிஸ் அலுவலர் ஒருவருக்கு இச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இதன்படி ஒரு பொலிஸ் அலுவலருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பொதுச் சட்டத்தின் கீழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைவிட மேலதிகமானவை.

அத்துடன் பிரிவு 42ன் படி தவறு செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர் அல்லது பாதுகாப்புப் படையினர் தடுத்து வைத்தல் பற்றி குறிப்பிடுகின்றது. அதாவது மேற்படி உத்தியோகத்தர் தமது கடமையின் போது எவரேனும் ஆளின் மரணத்தை விளைவிக்கின்றவிடத்து அவ்வாளை பொலிஸ் கட்டுக்காப்பில் தடுத்துவைக்கப்படுவதற்கென தோதான ஒரு அதிகாரியிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் என்றும் இப்பிரிவு கூறுகின்றது.

## கட்டுக்காவலின் போது ஒருவரது இறப்பு (பிரிவுகள் 43 - 46) (Death while in custody)

இது பற்றிப் பிரிவு 43ல் கூறப்பட்டுள்ளது. அதாவது பொலிஸ் அலுவலர் எவரினதும் அல்லது ஆயுதம் தாங்கிய படை உறுப்பினர் எவரினதும் நடவடிக்கை காரணமாக அல்லது அவர்களது கட்டுக்காவலில் இருக்கும் போது ஏற்படும் எவரேனும் ஆளினது இறப்பு ஏற்படுமிடத்து அது பற்றி அவர்கள் சார்ந்த படைப்பிரிவின் படை அதிகாரி பொலிஸ் தலைமைப் பரிசோதகர் அதிபதிக்கு அறிவிக்க வேண்டும். அதாவது பொலிஸ்மா அதிபர் அல்லது அருகில் உள்ள பிரதி பொலிஸ் அதிகாரிக்கு அறிவித்தல் வேண்டும்.

அத்துடன் பிரிவு 44ன்படி மேற்படி இறப்புப் பற்றிய அறிவித்தல் கிடைத்தவுடன் பொலிஸ்மா அதிபர் அல்லது பிரதிப் பொலிஸ்மா அதிபர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (A. S. P) தரத்துக்குக் குறையாத தரத்தில் உள்ள ஒருவரைச் சம்பவம் நடந்த இடத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். அவர் (A. S. P) அங்கு சென்று இறப்புக்கான காரணம் சூழ்நிலைகளை அவதானித்துப் பதியப்பணித்தல் வேண்டும். அத்துடன் இறந்தவரின் உடல் கண்டுபிடிக்கப்படுமிடத்து அந்த நிகழ்வினை நீதவானுக்கு உடனடியாக அறிவித்தலும் வேண்டும். அத்துடன் பிரிவு 44ன் படி இறந்த உடலைப் பிரேத பரிசோதனை செய்தலும் அதனை அடக்கம் செய்தல் பற்றியும் பிரிவு 45ல் கூறப்பட்டுள்ளது. இதன்படி அடக்கம் செய்யப்பட்ட உடலைத் தோண்டி எடுத்து விசாரணைகளை நடாத்துதல் மற்றும் தகனம் செய்தல் பற்றியும் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் மேற்படி இறப்பு பற்றி பொலிஸ்மா அதிபர் அல்லது பிரதி பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கப்படுமிடத்து அவர் மேல் நீதிமன்றத்தில் ஒரு விண்ணப்பம் செய்வார். அவ் விண்ணப்பத்தின் பேரால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மனிதனின் இறப்புப் பற்றி விசாரணை செய்வதற்கு மேல் நீதிமன்றத்திற்குப் பூரண நியாயாதிக்கம் வழங்கப்பட்டுள்ளது. இது பற்றிப் பிரிவு 46ல் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் பிரிவு 47ல் இது விடயத்தில் சட்டமா அதிபரின் தத்துவங்களில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் பிரிவு 48ன் படி பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது ஆயுதப் படை உறுப்பினர் ஒருவருக்கு இறப்பு ஏற்படுத்தப்படுமிடத்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இறந்தவரின் உடலைத் தகனம் செய்ய அல்லது அடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸ்மா அதிபர் அல்லது பாதுகாப்புப் படைகளின் படை ஏவுனர்களுக்கு அறிவித்தல் வழங்குதல் வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

**<u>கொடுக்கப்பட்ட கூற்றுக்களின் இயல் தகமை:</u>**

இது பற்றி இச் சட்டப்பிரிவு 49ல் கூறப்பட்டுள்ளது. இப்பிரிவு பயங்கரவாதத் தடைச்சட்டப் பிரிவு 16னை ஒத்ததாக உள்ளது. அதாவது குற்றம் சாட்டப்பட்ட ஒருவரால் அளிக்கப்பட்ட கூற்றானது சான்றுச் சட்டத்தின் பிரிவு 24க்கு ஏற்புடையதாக இருப்பின் அதனை ஒரு சான்றாகக் காண்பிக்கப்பட முடியும்.

**<u>அரச பகுப்பாய்வு அறிக்கை:</u>**

இது பற்றி இச்சட்டப்பிரிவு 51ல் கூறப்பட்டுள்ளது. அதாவது ஏதேனும் குற்றஞ்சாட்டப்பட்ட பதார்த்தம் அல்லது பொருட்களின் நோக்கை அல்லது இயல்பு பற்றி அறியும் நோக்கில் அப்பொருளை அல்லது பதார்த்தத்தை அரச பகுப்பாய்வாளருக்கு அனுப்பிப் பெறப்படும் சான்றிதழானது அது பற்றிய வழக்கு விசாரணையில் சான்றளிப்பதற்கு ஏற்புடையதாகும் என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு அவசர கால ஒழுங்கு விதிகள் (அவசரகாலச்சட்டம்) நமது நாட்டில் அமுல் நடத்தப்படுவதை நாம் ஓரளவிற்கு அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

இந்தவகையில் அவசர கால ஒழுங்கு விதிகளும் பயங்காரவாதத் தடைச்சட்டமும் நடைமுறையில் பல ஒத்த தன்மைகளைக் கொண்டிருப்பதையும் காணலாம். இச்சட்டங்களை ஒரு கடும் போக்கான சட்டங்களாக நோக்கப்படுவதையும் இவை சாதாரண சட்டங்களைப் புறத்தொதிக்கியுள்ளதையும் நாம் காண்ணூடாக காண்கின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத் தடைச்சட்டம்
## ( PREVENTION OF TERRORISM ACT )

**நேரம் :** 3 மணித்தியாலயம்

**பயிற்சிப் பொருட்கள்:** நிறப்பேனாக்கள், பேப்பர், போஸ்ரல் ஒட்டும் நாடா, எழுது பலகை.

**முறை :** விரிவுரை மூலமும், கலந்துரையாடல் மூலமும்

**பயங்கரவாதத் தடைச் சட்டம் என்றால் என்ன?**

நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டமாகும். அதாவது ஒரு தனிநபரால் அல்லது ஒரு குழுவால் அல்லது ஒரு ஸ்தாபனத்தால், அல்லது ஒரு நிறுவனத்தால் செய்யப்படும் சட்டமுரணான செயல்களைத் தடுப்பதற்காக 1979ம் ஆண்டு ஜுலை மாதம் 20ந் திகதியன்று பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட சட்டமே இந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டமாகும்.

**இச் சட்டத்தின் கீழான குற்றங்கள் :-**

இது பற்றி இச்சட்டப் பிரிவு 2ல் கூறப்பட்டுள்ளது. இதன்படி ஏதாவது ஒரு நபர் வேறொரு நபரின் மரணத்தை விளைவித்தால் அல்லது எவரையாவது கடத்தினால் அல்லது இச்சட்டதின் கீழான ஓர் சாட்சிக்கு மேற்படி தீங்கை விளைவித்தால் அல்லது எவராவது ஒருவரை (சாட்சியை) பயமுறுத்தினால் அல்லது அரசாங்க உடைமைகளைக் கொள்ளையடித்தால் அல்லது சேதப்படுத்தினால் அல்லது சட்ட ரீதியான அனுமதி இன்றிப் பயங்கர ஆயுதங்கள், வெடிமருந்துகள் ஆகியவற்றைத் தயாரித்தல், சேகரித்தல் அல்லது இறக்குமதி செய்தல் அல்லது மேற்கூறிய பொருட்களை உடைமையில் வைத்திருத்தல் அல்லது, சொற்களால் பேசப்படுதலோ அல்லது கட்புலனாகும் காட்சிகள் மூலம் அல்லது வேறு வகையால் பயங்கரவாதச் செயல்களைப் புரிதல் அல்லது இனவாத அல்லது சமரீதியான முரண்பாடுகளை தோற்றுவிக்கும் அல்லது அவ்வாறான நோக்கமுள்ள செயல்களைப் புரிதல் அல்லது பொது இடங்களிலுள்ள பெயர்ப்பலகைகளை அதிகாரமில்லாமல் அழித்தல் அல்லது சேதப்படுத்தல் அல்லது வைத்திருத்தல் போன்ற குற்றங்கள் இச்சட்டதின் கீழ் தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

இவற்றுக்கான தண்டனைகள் 5 - 20 வருட கடுழிய சிறைத்தண்டனை அல்லது ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் பிரிவு மூன்றின் (3) மேற்படி குற்றங்களைப் புரிய ஆயத்தமாதல், உதவுதல், சதி செய்தல் அல்லது தூண்டுதல் போன்றனவும் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களாகும். இது 5 - 20 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படக் கூடியதாகும்.

**தகவல் கொடுக்கத் தவறுதல்: Failing to give information**

இச்சட்டப்பிரிவு 5 இன்படி ஒரு குற்றத்தைப்பற்றி அல்லது அதனைப் புரிய ஆயத்தப்படுத்தல் பற்றிய தகவல் தெரிந்திருந்தும் அதனை ஒரு பொலிஸ் உத்தியோகத்தருக்கு அறிவிக்கத் தவறுதல் ஒரு தண்டனைக்குரிய குற்றமாகும். இப்பிரிவின் கீழ்தான் தற்போது அதிகளவான வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதை நாம் அவதானிக்க முடியும். காரணம் குற்றம் செய்பவர்களைக் காட்டிக் கொடுக்கவில்லை என்ற அடிப்படையிலாகும். இதற்கான தண்டனை ஏழு (7) வருடத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனையாகும். (ஆகக் குறைந்த கால எல்லை இல்லை)

**குற்றங்கள் பற்றிய விசாரணைகள்: Investigation of offences**

இச்சட்டப்பிரிவு 6 இன்படி மேற்படி குற்றங்கள் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஒரு பொலிஸ் அத்தியட்சகர் (A. S. P) அல்லது அவரது உத்தரவைப்பெற்ற உதவிப்பொலிஸ் பரிசோதகர் (S. I) அல்லது அவருக்கு மேற்பட்டவர் (S.I.க்கு மேற்பட்டவர்) ஒருவர், சட்டமுரணான செயலில் ஈடுபட்டிருப்பதாக நியாயமாகச் சந்தேகிப்பின்.

(1) அவரைக் கைது செய்யலாம்.
(2) ஓர்ஆதனத்தினுள் பிரவேசித்துச் சோதனை செய்யலாம்.
(3) ஏதாவது ஒரு வாகனத்தை நிறுத்திச் சோதனை செய்யலாம்.
(4) ஏதாவது ஒரு பொருளைப் பறிமுதல் செய்யலாம்.

இவ்வாறான செயல்களை ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் செய்வதை யாராவது தடுப்பின் அது 7 வருட சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய குற்றமாகும்.

**விளக்கமறியல் கட்டளை: (Remand Order)**

விளக்கமறியற் கட்டளைபற்றி இச் சட்டத்தின் பிரிவு 7 கூறுகிறது. அதாவது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றம் ஒன்றைப் புரிந்ததாக சந்தேகித்துக் கைது செய்யப்படும் ஒரு நபரை 72 மணித்தியாலங்களுக்கு மேற்படாமல் தடுத்து வைக்கப்பட முடியும். இக்காலப்பகுதி முடிவடையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் அவரை ஒரு நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்து அவரை மேலும் தடுத்து வைக்கப்பட வேண்டும் என ஒரு பொலிஸ் அதிகாரி கேட்குமிடத்து அவரை வழக்கு விசாரணை முடியும்வரை தடுத்து வைக்கப்பட வேண்டும். அவ்வாறல்லாத சந்தர்ப்பம் தவிர்ந்த நேரங்களில் அவர் 72 மணித்தியாலயத்தின் பின் விடுதலை செய்யப்படல் வேண்டும்.

விதி விலக்காக, சட்டமா அதிபரின் சம்மதம் பெறப்படுமிடத்து வழக்கு விசாரணை முடியுமுன் அவர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்படலாம். அத்துடன் பிரிவு 7 உப பிரிவு (2)ன்படி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஒருவர் குற்றம் புரிந்துள்ளார் என நியாயமான சந்தேகிக்கப்பட்டால் அவருக்கெதிரான வழக்கு மேல் நீதிமன்றத்தில் விசாரணை முடியும் வரை அவரை தடுத்து வைத்திருக்க நீதவான் கட்டளை இடுவார்.

## தடுப்புக் காவல் உத்தரவு - (Detention Order)

தடுப்புக்காவல் உத்தரவு பற்றிப் பயங்கரவாதத் தடைச்சட்டம் பிரிவு 9 இல் கூறப்பட்டுள்ளது. அதாவது இச்சட்டத்தின் கீழ் (ப.த.ச) ஏதாவது குற்றம் ஒன்றைப் புரிந்துள்ளார். அல்லது புரிகின்றார் அல்லது புரிய உள்ளார் என நியாயமாகச் சந்தேகிக்கப்படும் ஒரு நபரைப் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சர், அந்த நபரை மூன்று மாதத்திற்கு மேற்படாத காலத்துக்கு தடுப்புக்காவலில் வைக்கும்படி உத்தரவிடமுடியும். இந்த மூன்று மாதகாலப்பகுதி மேலும் நீடிக்கப்பட்ட வேண்டுமாயின் மேலும் ஒரு மூன்று மாதகாலத்திற்கு நீடிக்கப்படும் இவ்வாறு மூன்று மாதகாலம் நீடித்தலானது 18 மாதகாலம் வரையுமே செய்யப்பட முடியும். அதற்கு மேல் நீடிக்கப்பட முடியாததாகும். அத்துடன் இப்பிரிவின் கீழான உத்தரவை நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்த முடியாததாகும் என பிரிவு 10ல் கூறப்பட்டுள்ளது.

## நடமாட்டங்களைத் தடைசெய்தல்: Restriction of Movement

இச் சட்டத்தின் பிரிவு 11ன் படி பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சர் கருதினால் குற்றம் ஒன்று புரியப்பட்டது அல்லது இலங்கைக்கு உள்ளேயோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ அவர் பிரயாணம் செய்தல் பற்றி அல்லது ஒரு ஸ்தாபனத்தில் அவருடைய தொழிற்பாடுகள் பற்றி அல்லது ஒரு பொதுக்கூட்டத்தில் அவர் பேசுவது பற்றி அல்லது ஏதாவதொரு ஸ்தாபனத்தில் ஏதாவது பதவி வகிப்பது பற்றிக் கட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

அதாவது இங்கு ஒரு சட்டமுரணான செயல் ஒன்றைப் புரிந்தார் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவரின் சகல நடவடிக்கைகளையும் பாதுகாப்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அமைச்சர் கட்டுப்பத்தக்கூடிய சகல அதிகாரங்களும் இச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. அத்துடன் இச்சட்டத்தின் பிரிவு 12 இன்படி 11ம் பிரிவை மீறுபவருக்கு 5 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**பிரசுரித்தலைத் தடுக்கும் அதிகாரம்:** **Prohibition of Publication**

இச் சட்டத்தின் பிரிவு 14 இன்படி பாதுகாப்பு அமைச்சர் பின்வரும் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்.

அதாவது தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதி இன்றி ஏதாவது ஒரு குற்றம் புரியப்பட்டால் அது பற்றிய விசாரணையைப் பிரசுரிப்பதை, அத்துடன் வன்முறையைத் தூண்டக்கூடிய விடயங்களைப் பிரசுரித்தால், அத்துடன் இனரீதியான குரோதங்களைத் தூண்டக்கூடிய விடயங்களைப் பிரசுரித்தல் அத்துடன் இவ்வாறானவற்றை விநியோகித்தல் விற்பனை செய்தல் போன்றவற்றைத் தடை செய்யும் கட்டளையைப் பிறப்பிக்கலாம். அத்துடன் இவ்வாறானவற்றைப் பிரசுரித்த அச்சகத்தின் மீதும் ஒரு தற்காலிகத் தடை உத்தரவை விதிக்கலாம்.

மேற்கூறப்பட்ட குற்றச் செயலைப் புரிந்து ஒருவருக்கு 5 வருடச் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

## வழக்கு விசாரணை:

**TRIAL BEFORE HIGH COURT**

இது பற்றி இச்சட்டப்பிரிவு 15 இல் கூறப்பட்டுள்ளது. அதாவது இச்சட்டத்தின் கீழ் குற்றம் ஒன்றைப் புரிந்தவர் தொடர்பில் இவருக்கெதிரான வழக்கு விசாரணை ஏதாவது ஒரு மேல் நீதிமன்றத்தில் (High Court) ஜுரர்கள் இன்றி மேற் கொள்ளப்படும். அதற்கு முன் அவர் என்ன, என்ன குற்றம் புரிந்தாரோ அக்குற்றங்கள் அடங்கிய ''குற்றப்பத்திரம்'' (Indictment) அவருக்கு நீதிமன்றத்தால் வழங்கப்படும் அத்துடன் வழக்குக் குற்றப்பத்திரம் விசாரணையின் போது அவருக்கு விளங்கும் மொழியில் வாசித்துக் காட்டப்பட்டு, குறிப்பிட்ட குற்றம் சம்பந்தமாக அவர் ''குற்றவாளியா'' அல்லது ''சுற்றவாளியா'' என்று கேட்கப்படும், குற்றவாளி என்றால் உடன் தண்டனை வழங்கப்படும். சுற்றவாளி என்றால் தொடர்ந்து விசாரணை நடைபெற்றுக் குற்றம் நிரூபிக்கப்படாவிடில் விடுதலையும், நிரூபிக்கப்படின் சிறைத்தண்டனையும் வழங்கப்படும். குற்றம் நிரூபிக்கப்படும் வரை அக் குற்றஞ்சாட்டப்பட்டவர் நிரபராதி என்றே கொள்ளப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜூரர்கள் - (JURORS)

**ஜூரர்கள் என்றால்:**

குற்றவியல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட ஒரு நபர் பற்றிய வழக்கு விசாரணையில் விசாரணையைக் கேட்பதற்காக நீதிபதியை விட இன்னும் சிலர் அங்கு (நீதிமன்றில்) சமூகமாக இருப்பார்கள். அவர்கள் குற்றவிசாரணையைச் செவி மடுத்துக் குறித்த குற்றம் சாட்டப்பட்டவர் உண்மையிலேயே குற்றத்தைப் புரிந்துள்ளாரா எனக் கண்டறிந்து நீதிபதிக்கு கூறுவார் நீதிபதி தான் செவிமடுத்ததையும் இவர்கள் கூறியதையும் வைத்தே தனது தீர்ப்பை அளிப்பார். இவ்வாறு இருப்பவர்களையே ஜூரர்கள் எனப்படுவார்.

இந்த நடைமுறை சாதாரணக் குற்றவியல் வழக்குகளில் பின்பற்றப்படுகின்ற போதிலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்படும் ஒரு வழக்கில் பின்பற்றப்படமாட்டாது என்று இச் சட்டம் கூறுகின்றது. ஆகவே இப்பயங்கரவாதத் தடைச் சட்டமானது ஒரு சாதாரண சட்டமாக அல்லாமல் ஒரு கடும் போக்கான சட்டமாகவே காணப்படுகிறது எனலாம்.

**வாக்கு மூலங்களை அனுமதித்தல்:** **Admissibility of statements**

இது பற்றி இச்சட்டம் பிரிவு 16இல் கூறப்பட்டுள்ளது. அதன்படி எச்சட்டத்தில் எப்படிக் கூறப்பட்டிருந்தாலும். இச்சட்டதின் கீழ் குற்றம் சாட்டப்படும் ஒரு நபரால் அளிக்கப்படும் வாக்குமூலம் அல்லது குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அது வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாக இருந்தாலோ, அந்நபர் அப்போது ஒரு பொலிஸ் உத்தியோகத்தரின் கட்டுக்காவலிலோ அல்லது இல்லாமல் இருந்தாலோ அல்லது அவர் அந்த வாக்கு மூலத்தினை ஒரு விசாரணையின் போதோ அல்லது வேறுவிதமாகவோ முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, கேள்வி பதில் வடிவிலோ அன்றி வேறு விதத்திலோ அளித்திருந்தால் அது சான்றுக்கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24க்கு ஏற்புடையதாக இருப்பின் அவருக்கெதிராக ஒரு சான்றாக நிரூபிக்கப்படப் போதுமானது அதாவது சாட்சியச் சட்டப்பிரிவு 24க்கு ஏற்ப அந்த வாக்கு மூலம் பெறப்பட்டிருந்தால் அது அவருக்கெதிராக நீதிமன்றத்தில் ஒரு சான்றாகப் (சாட்சியாக) பயன்படுத்தப்பட முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்றுக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 என்ன கூறுகிறது எனில் , அக் குறிப்பிட்ட நபர் அளித்த வாக்குமூலமானது அந் நபரை அச்சுறுத்தியோ (பயமுறுத்தி) அல்லது ஏதாவது வழியில் தூண்டப்பட்டோ (தூண்டுதல்) அல்லது ஏதாவது வாக்குறுதியை அவருக்கு வழங்கியோ பெறப்பட்ட வாக்குமூலமானது ஏற்கப்பட முடியாது என்று கூறுகின்றது.

அதாவது மேற்கூறிய வகையிலன்றி ஒரு நபர் தானாக விரும்பி அந்த வாக்குமூலம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். என்று அப்பிரிவு கூறுகின்றது. இது நடைமுறையில் எந்தளவு சாத்தியமானது என்பதை நாம் விளங்கிக் கொள்வது அவசியம். அத்துடன் மேற்கூறப்பட்ட வாக்குமூலம் அல்லது கூற்று ஒரு பொலிஸ் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டதாயின் அது ஓர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்(A.S.P) தரத்துக்கு மேற்பட்டவருக்கு வழங்கியிருப்பின் மட் டும் ஏற்புடையதாகும் A.S.P. க்கு குறைந்த தரத்தையுடையவருக்கு வழங்கிய கூற்று ஒரு சான்றாக எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்கப்படமுடியாததாகும். இவ்வாறு வாக்கு மூலங்கள் அல்லது கூற்றுக்கள் சான்றாக நீதிமன்று முன் கொண்டுவரப்படும் சந்தர்ப்பங்களில் அந்தப் பொலிஸ் அதிகாரி இறந்து விட்டால் இதனை நிருபிக்க முடியாது சந்தேக நபர் விடுதலை செய்யப்படுவார். இந்நடைமுறை தற்போது நீதிமன்றங்களில் இடம்பெறும் ஒரு நடைமுறையாகும்.

## மேன்முறையீடு - (Appeal)

இது பற்றி இச் சட்டத்தின் பிரிவு 19இல் கூறப்பட்டுள்ளது. மேல் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட ஒரு தீர்ப்புக்கு எதிராக அத்தீர்ப்புத் தனக்குச் சாதகமாக இல்லை எனக் கருதுபவர் மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு **(Court of Appeal)** மேன் முறையீடு செய்யலாம். மேன் முறையீட்டில் தீர்ப்பு வரும் வரைத் தீர்ப்பளிக்கப்பட்டவர் தொடர்ந்து விளக்க மறியலிலேயே இருப்பார். மேல்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்பிலும் திருப்தியடையாத ஒருவர் உயர் நீதிமன்றுக்கு (Supreme court) மேன்முறையீடு செய்து தனது வாதத்தை முன்வைக்கும் சந்தர்ப்பம் உண்டு.

**நீதிமன்றங்களில் முன்னுரிமை: Priority in Courts**

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான வழக்கு விசாரணைகளுக்கே மேல் நீதிமன்றங்களில் ஏனைய வழக்குகளை விட முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என இச் சட்டத்தின் பிரிவு 21இல் கூறப்பட்டுள்ளது. அதே போன்றுதான் மேன்முறையீட்டு வழக்குகளிலும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். ஆனால் நடைமுறையில் நாம் பார்த்தால் நீதிமன்றங்களில் இது பின்பற்றப்படுவது மிக மிகக்குறைவே.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அத்துடன் இச் சட்டப் பிரிவு 20இன் படி குற்றவியல் நடவடிக்கைக் கோவையின் பிரிவு 303 ஆனது இச் சட்டத்திற்கு ஏற்புடையதல்ல என்று கூறப்பட்டுள்ளது. அதாவது ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை ஏற்புடையதல்ல என்று கூறப்பட்டுள்ளது. என்றாலும் நடைமுறையில் நீதிமன்றங்கள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை வழங்குவதைக் காணலாம்.

## ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை Suspended Sentence

ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை என்றால் குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு எதிராகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டு அவருக்கு சிறைத்தண்டனை வழங்கும் போது அவரைச் சிறைக்கு அனுப்பாது சில ஆண்டுக்கு எந்தக் குற்றமும் செய்யாது தடுக்கும் வகையில் வெளியில் விடுவது ஆகும். உதாரணமாக இரண்டு வருட சிறைத்தண்டனை 10 வருடத்திற்கு ஒத்திவைக்கப்படுகின்றது எனில் அவர் 10 வருடங்களுக்கு எந்த வித குற்றமும் மீண்டும் செய்யாது நடத்தல் வேண்டும். அவ்வாறு செய்து அக்குற்றம் நிருபிக்கப்பட்டால் அக்குற்றத்திற்கான தண்டனையுடன் சேர்த்து இந்த இரண்டு வருடத் தண்டனையையும் அனுபவிப்பார். இதுவே ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையாகும். இங்கு அவரது தண்டனை சில காலத்திற்கு ஒத்தி வைக்கப்படுவதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Jessy Anandan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org